Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 28, 2022

புதன்கிழமை டிசெம்பர் 28, 2022 | ஒளி: 08 கதிர்: 174 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



புகை மற்றும் மதுவால்

## நாளாந்தம் சதமடிக்கும் மரண எண்ணிக்கை

இலங்கையில் புகைபிடித்தல் மற்றும் மதுபான பாவனையால் நாளாந்தம் சுமார் 110 பேர் மரணமடைவதாக புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகார சபையின் தலைவர் கலாநிதி சமாதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## விவசாய குடும்பங்களுக்கு ரூ.15 ஆயிரம் கொடுப்பனவு

குறைந்த வருமானம் பெறும் விவசாய குடும்பங்களுக்கு தலா 15,000 ரூபாய் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

07 மாவட்டங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் நெற்செய்கையாளர்களின் குடும்பங்களுக்கே இந்தக் கொடுப்பனவை வழங்க அமெரிக்க முகவர் நிலையம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

கேப்பாபுலவு மண்ணிலிருந்து

# இராணுவமே வெளியேறு

## கேப்பாபுலவில் போராட்டம்; எமது நிலம் எமக்கு வேண்டுமெனவும் கோஷம்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, கேப்பாபுலவு மக்களால் செவ்வாய்க்கிழமை (27) காலை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கேப்பாபுலவு பூர்வீக கிராம மக்களின் சொந்தக் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு பாதுகாப்பு படைத்தலைமையகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2




மின்சாரக் கட்டணத்தை 60 - 65 % உயர்த்த வேண்டும்

மின்சாரக் கட்டணத்தை 60 - 65 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் றொஹான் செனவிரத்ன தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் வளாகத்தில் செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சொத்துகள் தொடர்பான தகவல்களை வெளியிட

## திகா, ஜீவன், இராதா கூட்டாக எதிர்ப்பு

### RTIஇல் அம்பலம்

பா.நிரோஸ்

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான், இராதாகிருஷ்ணன் ஆகியோர் தங்களது சொத்து விவரங்களை வெளியிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக நுவரெலியா மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

மின்கட்டணத்தை உயர்த்தாவிடின்

## 8 மணி நேர துண்டிப்பு கணிப்பு மெய்யாகும்

### அமைச்சர் காஞ்சன எச்சரிக்கை

உரிய நேரத்தில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்காவிட்டால், எட்டு மணி நேர மின்வெட்டு அமலாகும் என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் முன்வைத்துள்ள கணிப்பு யதார்த்தமாகிவிடும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

போக்குவரத்து குற்றங்களுக்கு

## ஜனவரி முதல் குற்றப்புள்ளி முறைமை



போக்குவரத்து குற்றங்களுக்கான குற்றப்புள்ளி முறையை ஜனவரி மாதம் முதல் அறிமுகப்படுத்த உள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க உறுதிப்படுத்தினார்.

நாட்டில் இடம்பெறும் வாகன விபத்துகளின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் குற்றப்புள்ளி முறை அறிமுகமாக உள்ளதாகவும் இந்த முன்மொழிவு அமைச்சரவையின் அனுமதிக்காக விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

முன்மொழியப்பட்ட முறையின்படி, 32 போக்குவரத்துக் குற்றங்களுக்கு குற்றப்புள்ளிகள் வழங்கப்படும் என்றும் சாரதியொருவர் 20 புள்ளிகளைப் பெற்றால், அவரது சாரதி அனுமதிப் பத்திரம் ஒரு வருட காலத்துக்கு இடைநிறுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## சீட்டின் நீளத்தை பொறுத்தே செலவு தீர்மானிக்கப்படும்

நாட்டின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அச்சிடும் செலவுகள், வாக்குச் சீட்டின் அளவைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் என அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## விசா விலக்களிப்பு

இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருப்பவர்களுக்கான விசா, இலங்கை மற்றும் கம்போடியாவால் விலக்களிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

## 7,162.1 கோடி ரூபாய் கடன் செலுத்தவேண்டும்

இலங்கையில் இரண்டு அரச வங்கிகளில் இருந்து குறுகிய கால கடன் அடிப்படையில் பெறப்பட்ட 7,162.1 கோடி ரூபாயை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் செலுத்தவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது என சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2


## இரட்டைக் குடியுரிமை பெற 5,401 விண்ணப்பங்கள்

2021ஆம் ஆண்டில் இரட்டைக் குடியுரிமை பெறுவதற்கு 5,401 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்றும் அதில் 1,621 விண்ணப்பங்கள் அவுஸ்திரேலியாவில் வசிப்பவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்று உள்ளதாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் 2021 ஆண்டு செயற்திறன் அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தில் வசிப்பவர்களில் 885 பேரும் அமெரிக்காவைச் சேர்ந்த 795 பேரும்

தொடர்ச்சி P2



## கொரோனா அதிகரிப்பு ஆராய்ந்தது அரசாங்கம்

சீனா உள்ளிட்ட நாடுகளில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்துள்ள நிலையில், இலங்கை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## உணவுப் பணவீக்கத்தால் தள்ளாடும் உலக நாடுகள்

2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், உலக நாடுகளில் உணவுப் பணவீக்கம் அதிகமாக உள்ளதாகவும் ஏறக்குறைய

தொடர்ச்சி P2

## சின்னத் தேர்தலுக்கு பரந்த கூட்டணி



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வகையில் உருவாக்கப்படும் எதிர்க்கட்சிகளின் பரந்த கூட்டணி தொடர்பில், ஏனைய கட்சிகளுடன் தொடர்ந்தும் கலந்துரையாட உள்ளதாக 'உத்தர லங்கா கூட்டமைப்பு' தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

நிலக்கரி விநியோக

## ஒப்பந்தத்துக்கு சட்டமா அதிபர் அனுமதி



### மதத் தலங்களுக்கு 5 kWஇலவச மின்சாரம்

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்குத் தேவையான நிலக்கரி விநியோகத்துக்கான ஒப்பந்தத்துக்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கி உள்ளதாகவும் அதற்கான விலைமனு இந்தோனேசிய நிறுவனம் ஒன்றுக்கு, செவ்வாய்க்கிழமை (27) வழங்கப்பட்டு உள்ளதாகவும் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## வியட்நாம் முகாமில் இருந்து 151 பேர் நாடு திரும்புகின்றனர்

கனகராசா சரவணன்

கனடாவுக்கு படகில் சட்டவிரோதமாகச் சென்று கடலில் காப்பாற்றப்பட்டு, வியட்நாம் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 303 பேரில், இலங்கையைச் சேர்ந்த 151 பேர், இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

வியட்நாம் நாட்டு நேரப்படி, செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு விமானம்மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## விவசாய குடும்பங்களுக்கு...

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, மொனராகலை ஆகிய மாவட்டங்களில், மாதாந்தம் 41,500 ரூபாயை விட குறைந்த வருமானம் பெறும் விவசாய குடும்பங்களுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தக் கொடுப்பனவை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இரு கட்டங்களாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் ஏ.எம்.எச். எல் அபேரத்ன தெரிவித்தார்.

இதனிடையே, ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக 08 பில்லியன் ரூபாய் நிதியை நாடளாவிய ரீதியில் நெற்செய்கையில் ஈடுபடும் 12 இலட்சம் குடும்பங்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

## திகா, ஜீவன், இராதா...

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழான விண்ணப்பம் ஒன்றுக்கு, நுவரெலியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கே.ஏ.எல்.எஸ் கலுகம்பிடிய கையெழுத்திட்டு 25.10.2022 என திகதி குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்ட பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான், வே.இராதாகிருஸ்ணன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மயில்வாகனம் திலகராஜ் மற்றும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அமரர்களான ஆறுமுகன் தொண்டமான், முத்துசிவலிங்கம் ஆகியோரது சொத்து விவரங்கள், கல்வித் தகைமைகள் உள்ளிட்டத் தகவல்களை வழங்கக் கோரி நுவரெலியா மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்கு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 02.10.2022 அன்று விண்ணப்பிக்கப்பட்டது.

இந்தப் பதில் கடிதத்தில், அமரர் ஆறுமுகன் தொண்டமான் 1994, 2001, 2004, 2010, 2015ஆம் ஆண்டுகளில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டுள்ளார். முத்துசிவலிங்கம் 1994, 2001, 2004, 2010, 2015 ஆம் ஆண்டுகளில் பொதுத்தேர்தலில் போட்டியிட்டுள்ளார். பழனி திகாம்பரம் 2004, 2010, 2015, 2020ஆம் ஆண்டுகளிலும், வே.இராதாகிருஷ்ணன் 1999, 2004, 2009, 2015, 2020ஆம் ஆண்டுகளிலும், மயில்வாகனம் திலகராஜ் 2015ஆம் ஆண்டும், ஜீவன் தொண்டமான் 2020ஆம் ஆண்டும் பொதுத்தேர்தலில் போட்டியிட்டுள்ளதாகவும் அரசியல்வாதிகளின் கல்வித் தகவல்கள் வேட்புமனுக்களில் சேர்க்கப்படாததால் தேர்தல் ஆணையகத்திடம் அரசியல்வாதிகளின் கல்வி தகவல்கள் இல்லை எனவும் பதில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும்,'RTI விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள 'சொத்துகள் மற்றும் பொறுப்புகள்' தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் அனுமதியுடனேயே வழங்கப்பட வேண்டும். எனவே சொத்துகள் மற்றும் பொறுப்புகளை வழங்குவதற்கு அவர்களின் அனுமதி எதிர்காலத்தில் கோரப்பட்டு, அனுமதி கிடைத்தால் மாத்திரமே அந்தத் தகவல்கள் வழங்கப்படும்' எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தவலறியும் உரிமைச் சட்டத்தின் 3(1) 5ஆம் பிரிவின்படி இலங்கை பிரஜைகள் ஒவ்வொருவரும் ஒரு பகிரங்க அதிகாரசபையின் உடமையில், கட்டுப்பாட்டில் உள்ள தவல்களை பெற்றுக்கொள்வதற்கான உரிமை இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, உதவித் தேர்தல் ஆணையாளர் கே.ஏ.எல்.எஸ் கலுகம்பிடிய வழங்கிய தவல்களில் திருப்தி இல்லை என்பதால் இது தொடர்பில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேன்முறையீட்டுக்கு 14.11.2022 என திகதி குறிப்பிடப்பட்டு சிங்கள மொழியில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், "நீங்கள் கோரியிருக்கும் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்களை சம்மந்தப்பட்ட நபர்களின் அனுமதியுடனேயே வழங்கப்பட வேண்டும் என்பதால், அவர்களின் அனுமதி கோரப்பட்டது. இதன்படி, சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்களை வழங்க சம்மந்தப்பட்டவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். எனவே, சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்களை வழங்க முடியாது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமையவே, தகவல்களை வழங்குவதற்கு மறுப்பு தெரிவிக்க முடியும். ஆனால் இதில் எதையும் குறிப்பிடாமல் தகவல்களை வழங்குவதற்கு நுவரெலியா மாவட்ட தேர்தல் ஆலுவலகம் மறுத்துள்ளது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், எம்.கே சமன் ஸ்ரீ ரத்நாயக்கவுக்கு 28.11.2022 அன்று மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளபோதிலும் இதுவரையில் பதில் கிடைக்கவில்லை என்பதால் தகவலறியும் ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கொரோனா அதிகரிப்பு...

இந்த விடயம் தொடர்பில் விசேட வைத்திய நிபுணர்களுடன் செவ்வாய்க்கிழமை (27) கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது என்றும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவமே வெளியேறு

இவ்வார்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள காணிகளுக்குரிய தமிழ் மக்கள், "எமது நிலம் எமக்குவேண்டும்", "இராணுவமே வெளியேறு", "எங்கள் சொந்தக் காணிகளுக்குள் இராணுவ முகாம் வேண்டாம்", "கேப்பாப்புலவு எமது பூர்வீக கிராமம்", "இனவழிப்பு யுத்தம் முடிந்து 14ஆண்டுகள் கேப்பாப்புலவு மக்கள் இன்னமும் அகதிகளாக வீதிகளில்", "ஸ்ரீ லங்கா இராணும் இன அழிப்பு இராணுவம்" உள்ளிட்ட வாசங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு, கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராணுவம் அபகரித்துவைத்துள்ள தமது சொந்த நிலங்களை விடுவிக்குமாறு தெரிவித்து கேப்பாபுலவில் அமைந்துள்ள முல்லைத்தீவு பாதுகாப்பு படைத்தலைமையக பிரதான நுழைவாயில் முன்பாக 2017 மார்ச் மாதம் முதலாம் திகதி கேப்பாபுலவு பூர்வீக கிராம மக்களால் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தின் பயனாக இரண்டு கட்டங்களாக கேப்பாபுலவில் ஒரு தொகுதி காணிகள் படையினரால் விடுவிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மீதமாகவுள்ள 54 குடும்பங்களுக்கு சொந்தமான 71 ஏக்கர் நிலங்களை படையினர் விட்டு வெளியேறி நாம் வாழ வழிசெய்யவேண்டும் என தொடர்ச்சியாக கோரி வந்தனர்.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்

"சொந்த நிலங்கள் இல்லாத நிலையில் நாம் சொல்லொனா துன்பங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றோம். எமது காணிகளில் உள்ள வருமானங்களை படையினர் அனுபவித்துக் கொண்டு எம்மை நடுத்தெருவில் விட்டுள்ளனர்" என்றும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

"காணி விடுவிப்பு தொடர்பிலும் அரசியல் தீர்வு தொடர்பிலும் பேசி வருவதாக நாம் அறிகின்றோம் . ஆகவே எமது சொந்த நிலங்களுக்கு நாம் திரும்பி செல்வது தொடர்பிலும் அந்தக் காணிகளில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பிலும் அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் சர்வதேசம் இனியும் தாமதியாது கேப்பாபுலவு மக்களின் இந்தத் துயரை துடைக்க ஆவன செய்ய வேண்டும்" எனவும் தெரிவித்தனர் .

இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களான ஆ. ஜோன்சன், க. விஜயகுமார் உள்ளிட்டவர்கள் மக்களோடு இணைந்து கலந்து கொண்டிருந்தனர் .

## ஜனவரி முதல் குற்ற புள்ளி முறைமை

150 கிலோ மீற்றர் வேகத்தில் வாகனம் செலுத்தினால் எட்டு புள்ளிகளும், வீதி விபத்தை ஏற்படுத்திய பின்னர், ஒரு நபர் அங்கிருந்து தப்பிச் சென்றால் 10 புள்ளிகள் சேர்க்கப்படும் வழங்கப்படும் என்றும் தெரிவித்த அவர், அனுமதி கிடைத்தவுடன் உத்தேச புள்ளி விபரம் வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

## விசா விலக்களிப்பு

இலங்கைக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்களை வைத்திருப்பவர்களுக்கான விசா தேவைகளை விலக்குவதற்கான ஒப்பந்தம் 2022 மே 10ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

புனோம் பென்னில் உள்ள வெளியுறவு அமைச்சில் வைத்து இலங்கை தூதுவர் சி.ஏ. சமிந்த ஐ. கொலன்ன மற்றும் கம்போடியா இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கொய் குயொங் ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டது. அந்த நடைமுறை 2022 டிசெம்பர் 24 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என பேங்கொக், இலங்கைத் தூதரகம் மற்றும் நிரந்தரப் பணிமனை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒப்பந்தத்துக்கு சட்டமா அதிபர்...

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (27) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் குறிப்பிட்டார்.

அனைத்து மத வழிபாட்டுத் தலங்களுக்கும் இந்திய கடன் வசதியின் கீழ் 5 கிலோ வோட் சூரிய மின் சக்தி இலவசமாக வழங்கப்படும்.

கொன்செப்ட் குளோபல் நிறுவனத்துடன் இணைந்து செயல்படும் அரிஸ்டா மித்ரா நிறுவனம் பெப்ரவரி மாதம் முதல் 720,000 மெற்றிக் தொன் நிலக்கரியை (12 கப்பல்கள்) வழங்க ஒப்புக்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## உணவுப் பணவீக்கத்தால்

அனைத்து குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளும் அதிக உணவுப் பணவீக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அதிக உணவுப் பணவீக்கத்தால் ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா, தெற்காசியா, ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா ஆகிய பகுதிகளில் உள்ள நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உலக வங்கி தெரிவிக்கிறது.

வங்கியின் தரவுகளின் அடிப்படையில், உலகில் உணவுப் பணவீக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நாடாக சிம்பாப்வே காணப்படுவதுடன், அங்கு உணவுப் பணவீக்கம் 321 சதவீதமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகமாக உள்ள நாடுகளைத் தரப்படுத்தி உலக வங்கி நவம்பர் மாதம் வெளியிட்ட பட்டியலில் 6 ஆவது இடத்தில் இருந்த இலங்கை, இம்முறை 74 சதவீத உணவுப் பணவீக்கத்துடன் 7ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

அதிக உணவுப் பணவீக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட இரண்டாவது நாடாக லெபனானும் மூன்றாவது நாடாக வெனிசுவேலாவும் பெயரிடப்பட்டுள்ளதுடன், முறையே 203, 158சவீத உணவுப் பணவீக்கத்தால் அந்நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

## இரட்டைக் குடியுரிமை...

இலங்கையில் இரட்டைக் குடியுரிமைக்காக விண்ணப்பித்துள்ள நிலையில், கனடா, இத்தாலி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்தில் வசிப்பவர்களாலும் கணிசமா விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அத்தகைய நபர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 9 ஆயிரத்து 234 இலங்கை பிரஜைகள் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளனர்.

## வியட்நாம் முகாமில் இருந்து...

கப்பல் மூலம் கனடாவுக்கு இலங்கையைச் சேர்ந்த 303 பேர் பயணித்த வேளை, 'லேடி ஆர் 3' படகில் மியான்மாரில் இருந்து தென்கடற்பரப்பு வுங்டாவ் கடற்கரையில் இருந்து 258 கடல் மைல் தூரத்தில் வைத்து நவம்பர் 8 ஆம் திகதியன்று படகு தத்தளித்தது.

கடலில் மூழ்கும் நிலையில் இருந்த போது, அங்கிருந்த ஒருவர் தொலைபேசி ஊடாக இலங்கை கடற்படையை தொடர்பு கொண்டார்.

கொழும்பிலுள்ள கடல் சார் ஒருங்கிணைப்பு அவசர முகவரம், வியட்நாம், சிங்கபூர், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உதவியை இலங்கை கடற்படை நாடியது. அந்தக் கடற்பகுதியில் இருந்த ஜப்பானிய கொடியிடப்பட்ட 'ஹீலியோஸ் லீடர்' கப்பலில் இருந்தவர்கள், அகதிகளைக் காப்பாற்றி வியட்நாம் கடற்படையிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்களை 3 தடுப்பு முகாமில் தடுத்துவைத்திருந்தனர். மீண்டும் நாட்டுக்கு திரும்ப விருப்பம் தெரிவித்த 151 பேர், உலக மீள்குடியேற்ற ஸ்தாபனமான (ஐ.எம்.ஓ) அமைப்பு அனுசரணையுடன் நாடு திரும்பவுள்ளனர்.

இவர்கள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இன்று (28) அதிகாலை வந்தடைவர்கள் என முகாமிலிருந்து நாடு திரும்புவதற்கு காத்திருக்கும் ஒருவர் உறுதிப்படுத்தினார்.

## நாளாந்தம் சதமடிக்கும் மரண எண்ணிக்கை

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்திருந்ததாவது,

நாட்டில் உள்ள போக்கு மற்றும் இத்தகைய நடைமுறைகளைத் தடுக்க கடுமையான சட்டங்களின் அவசியத்தை அதிகாரசபை எடுத்துரைத்துள்ளதாகவும் வரிகளை திருத்தவும், புகையிலை மற்றும் மதுபான பயன்பாட்டுக்கு எதிராக கடுமையான சட்டங்களை இயற்றவும் தாம் முன்மொழிவதாகவும் குறிப்பிட்டார்.

புகைபிடித்தல் மற்றும் புகையிலை பாவனையால் வருடாந்தம் சுமார் 40,000 பேர் இறப்பதாக தெரிவித்த அவர், இத்தகைய குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் சில சமயங்களில் இதுபோன்ற மரணங்கள் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை உருவாக்குவதாகவும் சுட்டிக்காட்டினார்.

புகையிலை மீதான முன்மொழியப்பட்ட வரிச் சூத்திரம் புகைபிடிப்பதில் இருந்து மக்களைத் தடுக்கும் என்பதுடன் மரணங்களைக் குறைக்க வழிவகுக்கும் என்றும் வரி திருத்தத்தின் மூலம் அரசாங்கத்தால் 11 பில்லியன் ரூபாய் மேலதிக வருமானத்தை ஈட்ட முடியும் என்றார்.

சில பாராளுமன்ற உறுப்பினர்கள் புகையிலை மற்றும் மதுபானங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக கடுமையான சட்டங்களை இயற்றத் தயங்குவதாக குற்றம் சுமத்திய அவர், சில பாராளுமன்ற உறுப்பினர்களும் மதகுருமார்களும் சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் மதுபான பாவனையை ஊக்குவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

## மின்சாரக் கட்டணத்தை 60 – 65 % உணர்த்த வேண்டும்

மின்சாரக் கட்டண உயர்வுக்கு பயன்படுத்தப்பட்ட 20 அனுமானங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த கருதுகோளின் பிரகாரமே இந்தக் கட்டண அதிகரிப்பு சதவீதம் கண்டறியப்பட்டு உள்ளதாக பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் கட்டண அதிகரிப்பில் கோரப்பட்ட தொகை கிடைக்காமையால் மீண்டும் கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளதாகவும் மேலும், சமுர்த்தி பயனாளிகள் மற்றும் நிதி நெருக்கடியில் உள்ள குடும்பங்களுக்கு கட்டணத்தை அதிகரிக்கும் போது திறைசேரியின் மூலம் நிவாரணம் கிடைக்கும் என்றார்.

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டு மின் உற்பத்தி அலகுகளை ஜனவரி 8 ஆம் திகதி வரை இயக்குவதற்கு தற்போதுள்ள நிலக்கரி கையிருப்பு போதுமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டு மின் உற்பத்தி அலகுகள் கையிருப்புக்களை கொண்டு இயக்கப்பட்டு வருவதாகவும் புதிய நிலக்கரி இருப்புகள் கிடைத்தவுடன், மூன்று அலகுகளும் இயங்கும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், 6 நிலக்கரி கப்பல்கள் ஜனவரியிலும் 7ஆவது கப்பல் பெப்ரவரி முதலாம் திகதியும் நாட்டுக்கு வருகைதரும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## 8 மணி நேர துண்டிப்பு...

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (27) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் குறிப்பிட்டார்.

மின் கட்டணத் திருத்தத்தால் இலங்கை மின்சார சபைக்கு 277.5 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படும் என்றும் நீடிக்கப்படும் மின்வெட்டை எதிர்கொள்ள மக்கள் தயாராக இருந்தால் கட்டணத் திருத்தத்தை நிறுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அதிக பணம் அச்சிடுதல் அல்லது அதிக வரிகளை விதித்தல் ஆகியவை கட்டண உயர்வைத் தவிர்ப்பதற்கான மேலும் இரண்டு வாய்ப்புகள் என்றும் அவர் அடிக்கோடிட்டு காட்டினார்.

தானோ, ஜனாதிபதியோ, அமைச்சரவையோ, தனிப்பட்டோ, அரசியல் ரீதியாகவோ எடுத்த தீர்மானம் இது இல்லை என்றும் மின்சார சபையின் பொது முகாமையாளரோ, தலைவரோ, ஒரு பொறியியலாளரோ மட்டும் எடுத்த முடிவு அல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

20 வருடங்களில், மின்சார சபையின் நுகர்வு மற்றும் பொருளாதார தரவுகளில் இருந்து கிடைக்கும் தரவுகளை ஆலோசித்த பின்னர், இது மிகவும் பொருத்தமான முறை என்று அவர்கள் பரிந்துரைத்தனர் என்றார்.

திட்டங்களுக்குள் தொடர்ச்சியான மின்சாரத்தை வழங்குவதற்காக, மொத்தத் தேவையில் 27% ஐ குறிப்பாக நீர் மின்சாரத்திலிருந்து உற்பத்தி செய்ய முடியும் என்று அவர்கள் நம்புதாகவும் குறிப்பிட்டார்.

## சீட்டின் நீளத்தை பொறுத்தே...

ஜனாதிபதி தேர்தல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் போது மாத்திரம் ஒரே அளவிலேயே வாக்குச் சீட்டு அச்சிடப்படும் எனவும், ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் வாக்குச் சீட்டின் அளவு குறைக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், வாக்குச் சீட்டுகளை அச்சிட எடுக்கும் நேரத்தைக் கருத்தில் கொண்டு, அதற்கான செலவுகள் திருத்தப்படும் என்று அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் தினத்துடன் ஒப்பிடும் போது வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கான கால அவகாசம் மிகக் குறைவாக இருந்தால் செலவுகள் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான முதற்கட்ட பணிகள் அரசாங்க அச்சகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதுடன், தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரத்தில் கிடைக்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 7,162.1 கோடி ரூபாய் கடன் செலுத்தவேண்டும்

கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் திறைசேரி உத்தரவாதத்தின் அடிப்படையில் 2016/2017 ஆம் ஆண்டில் குறுகிய கால நிதித் தேவைகளுக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதிகளைப் பெற்றுள்ளது. மேலும், 2017/2018 ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக முந்தைய கடன் தொகையை செலுத்தாமல் 2,944 கோடி ரூபாய் கடன் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2020/2021 ஆம் ஆண்டில் இதே 02 அரச வங்கிகளிடம் மூன்றாவது தடவையாக 75 மில்லியன்அமெரிக்க டொலர் கடனாகப் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின்படி, மார்ச் 31, 2021க்குள், இரண்டு அரச வங்கிகளுக்காக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் 7,162.1 மில்லியன் ரூபாய் செலுத்த வேண்டும் எனவும் தேசிய திறைசேரியின் உத்தரவாதத்தின் பேரில் இரண்டு அரச வங்கிகளில் இருந்து மூன்று தடவைகள் பெறப்பட்ட குறுகிய கால கடன் தொகை இன்னும் தீர்க்கப்படவில்லை என கணக்காய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்ன தேர்தலுக்கு பரந்த கூட்டணி

அதற்காக நியமிக்கப்பட்ட குழு இது தொடர்பான முன்னேற்றம் குறித்து கேட்டறிந்ததாக உத்தர லங்கா கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"உள்ளூராட்சி தேர்தல் என்பது பொதுமக்களின் உரிமையாகும். அதனை ஒத்திவைக்க அரசாங்கம் முயலுமானால் அது தோல்வியில் முடியும்" என்றார்.

# தேர்தலை நடத்த நிதி கிடைத்துள்ளது

## வார இறுதியில் திகதி அறிவிக்கப்படும்

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி திரைசேரியிடமிருந்து கிடைத்துள்ளதாகவும், இந்த வருடத்தின் இறுதி வாரத்தில் வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் திகதி அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஃப்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் நுவரெலிய தேர்தல் அலுவலகத்தில் நேற்று (27) நடைபெற்ற தேர்தல் காண்காணிப்பு தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதன்போது தொடர்ந்து உரையாற்றிய தேர்தல் ஆணையாளர் நாயகம், அடுத்த வருடம் மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நடத்த வேண்டுமென அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும்.

எல்லை நிர்ணயக் குழு 2012ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது மூன்று வருடங்கள் கடந்த நிலையில் அஷோக பீரிஸ் தலைமையில் 2 வருடங்கள் மதிப்பாய்வு செய்தே 8700 என்கிற நிலைக்கு வந்தோம். இதனை அடிப்படையாக வைத்தே 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடைபெற்றது. எனினும் அமைச்சருக்குள்ள அதிகாரத்தின்படி ஒரு வருடம் காலந்தாழ்த்தப்பட்டுள்ளது.

தேர்தலை நடத்துவதற்கு ஆட்சியில் உள்ள அரசாங்கத்திடம் நாம் நிதி ஒதுக்கீடுகளை கோருவோம். இதன்படி 2022ஆம் ஆண்டு நாம் 10 பில்லியன் ரூபாய் நிதியை கோரியிருந்தோம். அதுபோல 2023ஆம் ஆண்டும் நாம் 11 பில்லியன் ரூபாய் கோரியிருந்தோம். ஆனால், தேர்தலை நடத்த 10 பில்லியன் ரூபாய் வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது என்றார்.

ஜனநாயக நாடொன்றில் மக்கள் இறைமைக்கு முக்கியத்துவமளிப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. இந்த வருடத்தின் இறுதி வாரத்தில் வேட்பு மனுக்களை பெற்றுக்கொள்வதற்கான திகதி தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் தலையீட்டால் சாத்தியமானது



40 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்பட்டுவந்த யூரியா உரத்தை அரசாங்கத்தின் தலையீட்டால் 20 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவான விலையில் அனைவரும் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளதாக கமத்தொழில், வனசீவராசிகள், வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

வத்தளையில் உள்ள உரக் களஞ்சியசாலைக்கு நேற்று (27) கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், யூரிய உரத்தை நாம் 10 ஆயிரம் ரூபாய்க்கு வழங்குகிறோம். 10 ஆயிரம் ரூபாய்க்கு யூரியா வேறெங்கும் கிடைக்குமா என தெரியவில்லை. அரசாங்கத்தின் இச்செயற்பாட்டின் பிரதிபலனை நெல் விவசாயிகள் மாத்திரமின்றி ஏனைய விவசாயிகளும் அனுபவித்து வருகிறார்கள் எனவும் தெரிவித்தார் .

40,000 - 42,000 ரூபாய்க்கு கிடைத்த உரத்தை நாம் 10 ஆயிரம் ரூபாய்க்கு வழங்க ஆரம்பித்ததும் வெளியிலும் 20 ஆயிரத்துக்குக் குறைவாக யூரியா உரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. அரசாங்கத்தின் தலையீடுகளாலேயே இது சாத்தியமானது எனவும் தெரிவித்தார்.

# நாட்டை குழிக்குள் தள்ளுவார் ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்பதற்குப் பதிலாக மேலும் குழியிலேயே தள்ளுவாரென மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகியதும் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆதரவு இல்லை. எனவே, ராஜபக்ஷக்களுக்கு நம்பிக்கையாக இருந்த டலஸ் அழகபெருமவை அவர்கள் ஜனாதிபதியாக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் எடுத்த தீர்மானம் சிறந்தத் தீர்மானம் என பசில் ராஜபக்ஷ கூறுகிறார் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்படும்போது நாட்டு மக்கள் பாரியப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர். எரிபொருள் விலையை ரணில் குறைத்தாரா? இல்லை QR முறைமையின் கீழே நாம் இப்போதும் எரிபொருளைப் பெறுகிறோம். ஜனாதிபதியான பின்னர் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பதிலாக ராஜபக்ஷக்களின் பிரச்சினைகளையே ரணில் தீர்த்தார் எனவும் தெரிவித்தார்.



**இன்னும் 6 மாதங்களுக்குப் பின்னர் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற்று நாட்டைக் ரணில் கட்டியெழுப்புவார் என நினைக்கிறீர்களா? அவரால் அதனை செய்ய முடியாது. அவர் நாட்டை மேலும் குழியில் தள்ளுவார்**

இன்னும் 6 மாதங்களுக்குப் பின்னர் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற்று நாட்டைக் ரணில் கட்டியெழுப்புவார் என நினைக்கிறீர்களா? அவரால் அதனை செய்ய முடியாது. அவர் நாட்டை மேலும் குழியில் தள்ளுவார் என்றார்.

# 701,331 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்

2022 டிசெம்பர் 26 ஆம் திகதி வரையில் வெளிநாடுகளில் இருந்து 701,331 சுற்றுலாப் பயணிகள்இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.கடந்த2021 இல் பதிவான 194, 495 உடன் ஒப்பிடுகையில் இது திருப்திகரமான அதிகரிப்பு எனவும் தெரிவிக்கின்றது.

2022 டிசெம்பர் 1ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை 73,314 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

டிசெம்பர் மாதத்தில், அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை ரஷ்யாவில் இருந்து (15,681) பதிவாகியுள்ளது, இதற்கு அடுத்தபடியாக இந்தியாவிலிருந்து 13,892 வருகைகள் பதிவாகியுள்ளன.



இதேவேளை ஐக்கிய இராச்சியத்திலிருந்து 6,000 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 4,000 சுற்றுலாப் பயணிகளும் வந்துள்ளனர். ஜேர்மனி மற்றும் அமெரிக்காவிலிருந்து தலா 3,000 சுற்றுலாப்பயணிகளும், மாலத்தீவுகள், பிரான்ஸ் மற்றும் கனடாவில் இருந்து தலா 2,000 சுற்றுலாப்பயணிகளும் வந்துள்ளனர். இந்த காலகட்டத்தில் இஸ்ரேலில் இருந்து மொத்தம் 1,312 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் சுற்றுலாத்துறை நாட்டின் வருவாயில் மீண்டும்பங்களிப்பு செலுத்துவதாகவும், அடுத்த ஆண்டில் இந்த வருவாய் இரண்டு மடங்கு அதிகரிக்கும் வகையில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை கவரும் புதிய வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க உள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# மொட்டுக்கு கிராமத்துக்கு செல்ல முடியாது



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு தற்போது ஜனாதிபதி, பிரதமர் பதவி என எதுவுமில்லாமல் போயுள்ளது. கிராமங்களுக்கு செல்ல முடியாத நிலையே மொட்டுக் கட்சியினருக்கு ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அமைச்சரவைக்கு அமைச்சர்கள் தெரிவு செய்யப்படும்போது விஞ்ஞான ரீதியில் தெரிவு செய்யப்பட்டால் நாடு முன்நோக்கிச் செல்லும். நான் ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களுக்கு பொறுப்புகளை பிரித்து வழங்குவது தொடர்பில் 3 பேராசிரியர்களை நியமித்திருந்தேன் என்றார்.

எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றிபெற்றதும் மூன்று பேராசிரியர்களும் இது தொடர்பில் எனக்கு அறிவித்தனர். இதன்படியே நான் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுக்களை வழங்கியிருந்தேன் எனவும் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நான் கடந்தக் காலங்களில் கூட்டணி வைத்தபோதே நான் கட்சியைக் காட்டிக்கொடுத்துவிட்டு சென்றதாகவும், கட்சியை நான் நாசம் செய்துவிட்டே சென்றேன் எனவும் என்னை விமர்சித்தார்கள்.

ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இருக்கிறார். அதுபோல பிரமராக இருக்கும் தினேஸ் குணவர்தனவும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்தவர் அல்லர். ஜனாதிபதி, பிரதமர் பதவி என எதுவுமில்லாமல் மொட்டுக் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். கிராமங்களுக்கு மொட்டுக் கட்சிக்காரர்களுக்கு செல்ல முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல் நடந்தால் அதற்கு முகங்கொடுக்க நாம் தயாராகவே இருக்கிறோம். இவ்வாறான நிலையில் எமக்கு எவரும் சவால் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. இதுபோல பலரும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். மொட்டுக் கட்சியின் தலைவர்கூட இதனையே கூறினார். குறுகியக் காலத்தில் கட்சி ஒன்றை அமைத்து ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றிபெற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் பெற்றுவிட்டதாக மொட்டுக் கட்சியின் தலைவர் கூறினார். இறுதியில் என்ன நடந்தது எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.





### மட்டக்களப்புக்கு விஜயம்...

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அழைப்பின் பெயரில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர் பிறேமஸ்ரீ மற்றும் அவருடன் இணைந்த குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்தனர்.

### போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு

# “அரசியல்வாதிகள், பொலிஸாரின் ஒத்துழைப்புகள் கிடைக்கின்றன”



சிறைக் கைதிகளும் மனிதர்களே என கூறிக்கொண்டு இருப்பதால் மாத்திரம் எந்தவிதமானப் பயனுமில்லை. மனிதாபிமான ரீதியாக அவர்களை நடத்த வேண்டும் தெரிவிக்கும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நாட்டில் போதைபொருள் பரவுவதற்கு போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

சிறைச்சாலைக் கட்டமைப்பை முழுமையாக மாற்றியமைக்க வேண்டும். இதற்காக 1934ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற்தடவையாக சிறைச்சாலைகள் ஒழுங்கு விதிகளை தற்போதையக் காலத்துக்கு ஏற்றவாறு சமர்ப்பித்துள்ளேன். சிறைக் கைதிகளும் மனிதர்களே என கூறிக்கொண்டு இருப்பதால் மாத்திரம் எந்தவிதமானப் பயனுமில்லை. மனிதாபிமான ரீதியாக அவர்களை நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எந்த குற்றத்துக்காக சிறைச்சாலைக்கு வருகிறார்கள் என்பது முக்கியமல்ல. சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகள் அனைவரதும் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும். சிறு சிறு குறைப்பாடுகள் ஏற்பட்டுள்ளபோதிலும் தற்போதைய சிறைச்சாலைகள் திணைக்களம் கைதிகளின் உரிமைகளை சிறப்பாகப் பாதுகாப்பதாகவும் தெரிவித்தார்.

85 சதவீதமான சிறைக் கைதிகள் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களைக் கொண்டவர்கள். இதில் 95 சதவீதமானவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள்.

# “அரசாங்கத்திலிருந்து விலக தயாராகவே இருக்கிறேன்”

அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு எந்நேரமும் தயாராக இருப்பதாக தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க, இந்த அரசாங்கம் எங்களால் அமைக்கப்பட்டிருந்தாலும் அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்ட தயங்க மாட்டேன் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர்



சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், நாம் அரசாங்கத்திலிருந்தாலும் அரசாங்கம் செய்யும் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் அல்ல. அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பாராட்டிவிட்டு பின்னர் மக்களிடமிருந்து ஏச்சுப்பேச்சுகளை வாங்குவதற்கும் நாம் தயாரில்லை.

அரசாங்கத்தை அமைத்தவர்கள் என்கிற ரீதியில் அரசாங்கம் மக்களை நெருக்கடிக்குள் தள்ளுமாக இருந்தால் அதனை எதிர்ப்பதற்கு எமக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த ஒருபோதும் பின்நிற்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

# திருவெம்பாவை விரதம் ஆரம்பம்

வி.ரி.சகாதேவராஜா

இந்துக்களின் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வலம் இன்று(28) ஆரம்பமாகின்றது.

சிவனை நினைந்து வழிபடும் இவ்விரதம் புதன்கிழமை அதிகாலையுடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இறுதியில் பத்தாம் நாள் ( 06.01.2023) வெள்ளிக்கிழமை திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் திருவெம்பாவை நோன்பு நிறைவடைகிறது.

இக்காலகட்டத்தில் பிரம்ம முகூர்த்த வேளையாம் அதிகாலை 4-6 மணி வேளையில் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதுடன், இவ்ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் அருளைப் பெறுவது இந்துக்களின் வழமையான செயற்பாடாகும்.

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயம்:

# மாணவர்களின் ஒழுங்கற்ற வரவுகளும் இடைவிலகலும் அதிகரிப்பு

## கிராம மட்டத்தில் விசேட கவனம் செலுத்த அறிவுறுத்தல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பின் தங்கிய பிரதேச பாடசாலைகளிலும் உயர்தரப் பாடசாலைகளிலும், மாணவர்களின் ஒழுங்கற்ற வரவுகள், இடைவிலகல்கள் என்பன தொடர்ச்சியாக அதிகளவில் காணப்படுவதாக அண்மையில் நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்தி கூட்டத்தில், வலயக் கல்வி திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம மட்டங்களில் சேவையாற்றும் தன்னார்வ தொண்டு அமைப்புகள், கிராம மட்ட அமைப்புகள் என்பவற்றாலும், குறித்த ஆபத்து சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து, கிராம மட்டங்களில் பணியாற்றும் கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டுமென மாவட்ட அரச அதிபரால், பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, கல்வி பொதுத் தராதர (சா.த) பரீட்சைக்கு இம்முறை தோற்றிய நிலையில், தொழிற்கல்வியை தொடர மாணவர்கள் ஆர்வம் இல்லாத நிலை, இந்தப் பிரதேசங்களில் காணப்படுகின்றன என்றும் தொழிற்பயிற்சியை வழங்கும் வகையில் அண்மையில், தருமபுரம் மத்திய கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வு கலந்துரையாடலில், குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கு தோற்றிய 87 மாணவர்கள், தொழில் கல்வியை பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதியைக் கொண்டிருந்தும் 10 பேர் மாத்திரமே அன்றைய கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பிரதேசங்களில் அதிகரித்த போதைப்பொருள் பாவனை, சட்டவிரோத செயற்பாடுகள் என்பவற்றின் காரணமாக இளம் பிராயத்தினர் பாடசாலை கல்வியை விட்டு இடை விலகுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மண்டைக் கல்லாறு ஊடாக உவர் நீர் உட்புகுதலை தடுக்கும் பணிகள்

## உலக வங்கியின் நிதி உதவியுடன் அடுத்த ஆண்டில் முன்னெடுப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்ட மண்டைக் கல்லாற்றுக்கு ஊடாக பயிர்செய்கை நிலங்களுக்குள் உவர் நீர் உட்புகுதலை தடுக்கும் வகையில், 495 மில்லியன் ரூபாய் செலவில் கதவுகளுடன் கூடிய உவநீர் தடுப்பணையை அமைக்கும் பணிகள், உலக வங்கியின் நிதி உதவியுடன் 2023ஆம் ஆண்டில் முன் னெடுக்கப்படவுள்ளன.

மண்டைக்கல்லாற்றுக்கான உவநீர் தடுப்பணை அமைக்கப்படாமையால், கடல் பெருக்கு காலங்களில், கடல் நீர் உட்புகுந்து வன்னேரிக்குளம், குஞ்சு குளம், மண்ணியாகுளம் உள்ளிட்ட பகுதிகள் உவர் நிலங்களாக மாறியுள்ளதுடன் குறித்த கிராமங்களில் இருந்து மக்களும் முற்றாக இடம் பெயர்ந்துள்ளனர்.

தற்போது ஆணை விழுந்தான், அக்கராயன் குளம், மணியங்குளம் ஆகிய பகுதிகளும் உவநீர் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருவதுடன், மண்டைக்கல்லாறு பகுதியை அண்மித்த பூநகரி பிரதேச செயலாளார் பிரிவின் கீழுள்ள பெரும்பகுதியும் இவ்வாறு உவர் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளன. குறித்த பிரதேசத்தில் சுமார் 6,140 ஏக்கர் வரையான நிலங்கள் உவர் நிலங்களாக மாறி, வெற்றுத்தரவைகளாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில், ஏ 32 வீதியில் மண்டைக்கல்லாறு பாலத்துக்கு அண்மித்த பகுதியில், உலக வங்கியின் 495 மில்லியன் ரூபாய் நிதி உதவியுடன் கதவுகளுடன் கூடிய உவர் நீர் தடுப்பணை அமைப்பதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கு எதுவாக, வன வளத் திணைக்களத்திடமிருந்து குறிப்பிட்ட சில பகுதிகளை விடுவிக்க வேண்டி உள்ளதால், இதற்கான வேலைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் ஆரம்பிக்கப்பட உள்ளன என்றும் கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்...**
கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஆழிப்பேரலையால் உயிரிழந்த உறவுகளுக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வு, நேற்று முன்தினம் (26) நடைபெற்றது.
சுப்பிரமணியம் பாஸ்கரன்

ஒட்டுசுட்டானில்

# தனிமையில் இருந்தவர் வீட்டில் கொள்ளை

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் நகர்பகுதிக்கு அண்மித்த வீட்டில், தனிமையில் இருந்தவரிடம் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (25) இரவு இடம்பெற்றுள்ளது.

வீட்டில் தனிமையில் இருந்த வயோதிபர், இரவு வேளை தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த சமயம், வீட்டுக்குள் நுளைந்த கொள்ளையர்கள், அவரை கட்டிவைத்துவிட்டு, அவர் அணிந்திருந்த நகைகள் அனைத்தையும் கொள்ளையடித்துததுடன் குளிரூட்டியில் இருந்த மதுபானங்களையும் அருந்திவிட்டு சென்றுள்ளார்கள்.

சம்பவம் தொடர்பில், ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளதாகவும் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கள்ளப்பாடு கிராமத்தில் நினைவேந்தல்



■ சண்முகம் தவசீலன்

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக அதிகளவானவர்கள் காவு கொள்ளப்பட்ட முல்லைத்தீவு, கள்ளப்பாடு கிராமத்தில், கள்ளப்பாடு பொதுவிளையாட்டு மைதானத்தில் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில், அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

உயிரிழந்தவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க, மலர் தூவி, தீபமேற்றி உணர்வுபூர்வமாக அஞ்சலிகளை செலுத்தினர். இந்நிகழ்வில் உயிரிழந்வர்களின் உறவினர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஓம் சரவணசேவா அறக்கட்டளையால்

# வீடுகள் கையளிப்பு

■ க. அகரன்



வவுனியா, ஈச்சங்குளத்தில் ஐக்கிய இராட்சிய ஓம் சரவணசேவா அறக்கட்டளையின் ஊடாக அமைக்கப்பட்ட நான்கு வீடுகள் மக்களுக்கு கையளிக்கப்பட்ட ன.

'சற்குரு சரவண பாவா மனசாந்தி குடியிருப்பு' எனும் பெயரில் அமைக்கப்பட்ட இந்தக் குடியிருப்பில் உள்ள வீடு ஒன்றின் பெறுமதி சுமார் 45 இலட்சம் ரூபாய் ஆகும். இவை விசேட தேவையுடையோர் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. இதன்போது சற்குரு சரவண பாபா குரு, இராதாகிருஷ்ணன் எம். பி உட்பட, முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# சேனா படைப்புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

■ எம்.எஸ்.எம் ஹனிபா



அம்பாறை மாவட்டத்தில் சேனா படைப்புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த சோளச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கான விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ சனீர், நேற்று (27) தெரிவித்தார்.

விவசாய போதனாசிரியர்கள், விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகள், விவசாயப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கலாக, பிரதேச செயலக ரீதியாக விவசாய செயலணிக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, சேனா படைப்புழு தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களுக்கு சென்று, விவசாயிகள் மத்தியில் படைப்புழுவின் தாக்கம் தொடர்பாகவும், எதிர்காலத்தில் இத்தாக்கம் பரவாமல் தடுப்பதற்குரிய விழிப்புணர்வூட்டும் வகையில் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் என்பன விநியோகிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

சோளச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் ஒருங்கிணைந்த பீடை நாசினி முறையினூடாகவும், இயற்கை பசளையை பாவிக்க வேண்டுமெனவும், மண்ணின் வளத்தை அதிகரிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

காத்தான்குடி மத்திய கல்லூரியில்

# சுய கற்றல் நிலையம் அங்குரார்ப்பணம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்



காத்தான்குடி மத்திய கல்லூரியில்சுய கற்றல் நிலையம் திங்கட்கிழமை (26) அங்குரார்ப்பண நிகழ்வு கல்லூரியின் அதிபர் எம்.சீ.எம்.ஏ சத்தார் தலைமையில் நடைபெற்றது.

க.பொ.த (சாதாரண) தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை இலக்காகக் கொண்டு, மத்திய கல்லூரியில் 1997ஆம் ஆண்டு சாதாரண தரம், 2000ஆம் ஆண்டு உயர் தரம் கற்ற பழைய மாணவர்களும் இமாறா நிறுவனமும் இதற்கான முழுமையான நிதிப் பங்களிபாக நான்கு மில்லியன் ரூபாயை இந்தச் சுய கற்றல் நிலையத்தின் ஒரு வருடத்துக்காக மதிப்பிடப்பட்டு மத்திய கல்லூரியின் விடுதியில் உருவாக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் அனுஷ்டிப்பு

■ வி.ரி சகாதேவராஜா



சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமும், பிரதேச மாற்றுத்திறனாளிகள் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம், பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

'சமத்துவமான உலகத்தை வளர்ப்பதில் புத்தாக்கத்தின் வகிபங்கு உள்ளடங்கிய வளர்ச்சிக்கான உருமாறும் தீர்வுகள்' எனும் தொனிப்பொருளில் அமைந்த இந்நிகழ்வில் 'சிமிர்னா' விசேட தேவையடைய பிள்ளைகள், 'புகலிடம்' விசேட தேவையடைய பிள்ளைகள், மகிழூர்முனை சக்தி வித்தியாலய விசேட தேவையடைய மாணவர்கள் ஆகியோரால் ஆற்றுகை செய்யப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

இந நிகழ்வில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் இ. கிருபாகரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவை) திருமதி க மனோகரன், மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவை) திருமதி அ . சந்திரகுமார், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# கரைவலை மீனவர்கள் மகிழ்ச்சி



■ ரீ.எல் ஜவ்பர்கான்

தற்போது நிலவும் சீரற்ற வானிலைக்கு மத்தியிலும் மட்டக்களப்பு கரையோர பகுதிகளில், கரைவலை மீனவர்களின் வலைகளில அதிகமான மீன்கள் பிடிபடுவதை அவதானிக்க முடிகின்றது.

நாவலடி பகுதியில் காலை, மாலை நேரங்களில் மீனவர்கள் கரைவலை மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் வலைகளில் நெத்தலி, பாரை, கும்பளா உட்பட பலவகை மீன்கள் பிடிக்கப்பட்டு, கடற்கரையோரத்திலேயே பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதுடன், அதிகமான மீன்களை மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதையும் அவதானிக்க முடிகின்றது.

திருகோணமலையில் இருந்து கல்முனை:

# பசுமைப்புரட்சி விழிப்புணர்வு சைக்கிளோட்டம்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

சைக்கிள் ஓட்டம் மூலமாக மீள்காடாக்கம்' என்ற சூழலியல் எண்ணக்கருவை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று விழிப்புணர்வூட்டும் 'CYCLING GREEN' குழுமத்தின் சைக்கிள் ஓட்டம், திருகோணமலையில் இருந்து கல்முனை வரை ஒழுங்கு செய்யப்பட்டது.

இதன்போது மூதூரில் இயங்கும் 'மூதூர் ரைடர்ஸ் ஹப்', 'எலைட் அகடமி', 'மூதூர் லயன்ஸ் கழகம்' என்பன ஒன்றிணைந்து குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்பு செய்தனர்.

இதன்போது 2,000 இற்கும் மேற்பட்ட விதைப்பந்துகள் அன்பளிப்பு செய்யப்பதோடு, அவற்றை எவ்வாறு தயாரிப்பது தொடர்பான வழிகாட்டலும் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் முஹம்மட் றியாஸால் வழங்கப்பட்டது.



திருகோணமலையில்

# பெண்களுக்கான டிஜிட்டல் அறிவை மேம்படுத்தல் செயலமர்வு

■ ஹஸ்பர்



பெண்களுக்கான டிஜிடல் அறிவை மேம்படுத்துதல் தொடர்பிலான செயலமர்வு திருகோணமலையில் உள்ள தனியார் ஹோட்டலில் திங்கட்கிழமை (26) நடைபெற்றது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (CAFFE) அமைப்பின் ஏற்பாட்டில், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீனின் வழிகாட்டுதலில் 'ஜனனி' திட்டம் எனும் கருப்பொருளின் கீழ் நடைபெற்றது.

சிவில் சமூக பெண் பிரதிநிதிகளுக்காக நடைபெற்ற குறித்த செயலமர்வில், பெண்களின் அரசியல் உரிமைகள், சமூக வலைத்தளங்களின் பாவனை, வெறுக்கத்தக்க பேச்சு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பரந்துபட்ட தெளிவை வளவாளராக கலந்து கொண்ட உதவி தேர்தல் ஆணையாளர் பண்டார மாபா தெளிவுபடுத்தினார்.

குறித்த நிகழ்வில், 'கெபே' அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் ஆர்.எம் ராபில், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அக்குறணை மிதந்ததால்

# ரூ. 300 கோடிக்கும் அதிகமாக நட்டம்

ஷேன் செனவிரத்ன

கடந்த வாரம் நாட்டில் நிலவிய சீரற்ற வானிலையால் அக்குறணை நகரில் ஏற்பட்ட வெள்ளத்தால் 300 கோடி ரூபாய்க்கு அதிகமாக நட்டம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அக்குறணை நகரை ஊடறுத்துச் செல்லும் பிஹாஓயகொட பெருக்கெடுத்ததால் அக்குறணை நகர் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியது.

இதனால் அம்பதென்னயிலிருந்து அக்குறணை 7ஆம் மைல்கல் வரையான வர்த்தக நிலையங்களும் 340 வீடுகளும் சேதமடைந்துள்ளதென அக்குறணை பிரதேச செயலாளர் இந்திகா அபேசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த வர்த்தக நிலையங்கள், வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் மதிப்பீடு செய்ய அரசாங்கத்தால் 5 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



முறையற்ற அபிவிருத்திச் செயற்பாடுகளால்

# கண்டி அழியும் அபாயம்

## சிரேஷ்ட பேராசிரியர் எச்சரிக்கை

ஷேன் செனவிரத்ன

சட்டவிரோத அபிவிருத்திச் செயற்பாடுகள், மகாவலி ஆற்றுக்கு நீர் செல்லும் பிரதான கால்வாய்களின் இருபுறமும் உள்ள அனுமதியற்ற நிர்மாணங்களே சீரற்ற காலநிலை காரணமாக கண்டி நகர் அழிவை சந்தித்தமைக்கான பிரதான காரணம் என பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் பெய்த கடும் மழை, கண்டியில் இவ்வளவு அழிவை ஏற்படுத்தியமை ஏன் என்பது தொடர்பில் அவரிடம் வினவப்பட்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

80 வருடங்களின் பின்னர்தான் மழையால் கண்டி நகருக்கு இவ்வாறானதோர் ஆபத்து ஏற்பட்டுள்ளதென தெரிவித்த அவர், இதற்கு முன்னர் 1948ஆம் ஆண்டு கண்டி மாநகரில் பலத்த மழை பெய்து, கண்டி ஏரி கூட நிரம்பி வழிந்தது.

கண்டி நகரின் அனைத்து வடிகால் அமைப்புகளும் இரண்டு பிரதான கால்வாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதுவே வில்லியம் கோபல்லாவ மாவத்தையின் திசையிலிருந்து மகாவலி ஆற்றை நோக்கிப் பாய்ந்து மகாவலி ஆற்றை நோக்கி அலி நவன தோட்டாவை அண்மித்து மகாவலி ஆற்றின் இரண்டு கால்வாய்களுக்குச்



செல்லும் மத்திய கால்வாய் ஆகும்.

ஆனால் இந்த இரண்டு கால்வாய்களையும் கவனித்தால், இவை வெவ்வேறு நபர்களின் கட்டுப்பாட்டில் இருப்பது போல் தெரிகிறது. வில்லியம் கோபல்லவ மாவத்தைக்கு நடுவில் உள்ள கால்வாயை அவதானிப்பீர்களானால் அதில் பல்வேறு நபர்கள் கொங்கிறீட் பயன்படுத்தி நிர்மாணங்களை செய்திருப்பதை காணமுடிகிறது.

அதேப்போல் மஹியாவ கால்வாயைக் கண்காணித்தால் அங்கு பல இடங்களில் கால்வாய் இருப்பதற்கான அடையாளம் இல்லை. பல இடங்களில் வாகன விற்பனை நிலையமோ அல்லது வேறு கட்டடங்களோ காணப்படுகின்றன.

இவ்வாறான கட்டடங்களால் கால்வாய் அடைப்பு ஏற்பட்டு,



கனமழையின் போது வெள்ளம் ஏற்படுகிறது என்றார்.

இவ்வாறான முறையற்ற அபிவிருத்திச் செயற்பாடுகளால் எதிர்காலத்தில் நகருக்கு மேலும் அழிவுகள் நிகழலாம். இந்த இரண்டு கால்வாய்களையும் 1980களில் இருந்த நிலைக்கு கொண்டு வர வேண்டும். இல்லை என்றால் பல உயிர்கள் பலியாகலாம் என்றார்.

ஹட்டன் இ.போ.ச டிப்போவுக்கு

# 10 மில்லியன் ரூபாய் வருமானம்

சுதத்.எச்.எம்.ஹேவா

நத்தார் பண்டிகையுடன் கூடிய மூன்று நாள் விடுமுறையில் பெருமளவிலான யாத்திரிகள் சிவனொளிபாதமலைக்கு வருகைத் தந்ததன் மூலம் ஹட்டன் இலங்கை போக்குவரத்து சபை 10 மில்லியன் ரூபாய் வருமானத்தைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஹட்டன் இ.போ.ச பஸ் டிப்போ அதிகாரி கே. கீர்த்திரத்ன, நத்தார் விடுமுறையின் போது, பெருமளவான யாத்திரிகர்கள் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஹட்டனுக்கு வருகைத் தந்திருந்த நிலையில், இவர்களுக்கான குறுந்தூர மற்றும் நெடுந்தூர சேவையில் ஹட்டன் டிப்போவின் இ.போ.ச பஸ்கள் சேவையில் ஈடுபட்டமையால் வார இறுதியில் 127 இலட்ச ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது என்றார்.

இவ்வாறு அதிக வருமானத்தைப் பெறுவதங்காக சாரதிகள், நடத்துனர்கள் உள்ளிட்ட டிப்போவின் முழு பணிக்குழுவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது என்றார்.

# மாரடைப்பால் யாத்திரி மரணம்

செ.தி. பெருமாள்

சிவனொளிபாதமலைக்கு யாத்திரைச் சென்ற ஒருவர், மாரடைப்பால் மரணமடைந்த சம்பவமொன்று நேற்று (27) பதிவாகியுள்ளது.

கரந்தெனிய பகுதியைச் சேர்ந்த 74 வயதான பெல்வத்தகே பிரேமரட்ன என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று (27) அதிகாலை மலை ஏறிக் கொண்டிருந்த போது, ரத்து அம்பலம பகுதியில் வைத்து திடீர் கடும் சுகயீனம் அடைந்த இவர், உடனடியாக மஸ்கெலியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# தேவையான வைத்தியர்களை நியமிக்கவும்

## இராஜாங்க அமைச்சருக்கு அவசரக்கடிதம்

எம்.செல்வராஜா

பசறை- மெட்டிகாதன்னை கிராமிய வைத்தியசாலைக்கு தேவைahd வைத்தியர்களை உடனடியாக நியமிக்குமாறு,கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், ஊவா மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்து அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது கொக்காகலை, பட்டாவத்தை, கல்லுள்ளை, டுமோ, போன்ற பெருந்தோட்டங்கள் மற்றும் கிராமங்கள் பலவற்றுக்கு மத்தியில் மெட்டிகாதன்னை கிராமிய வைத்தியசாலை அமைந்துள்ளது.

ஆயிரக்கணக்கான தமிழ்,சிங்கள மக்களின் சுகாதார சேவைகள் இவ் வைத்தியசாலை ஊடாகவே பூர்த்தி செய்யப்படும் நிலையில்,இவ் வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு நான்கு வார்டுகளும் உள்ளன.

ஆனால் ஒரு வைத்தியர் மாத்திரமே கடமையில் ஈடுபடுவதாகவும் எனவே, இவ் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கமைய தேவையான வைத்தியர்கள் கடமைகளில் இருக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே வைத்தியசாலைக்கு தேவையான வைத்தியர்களை, உடன் நியமிக்குமாறும் இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுமக்களிடம் கையளிப்பு

எஸ்.சதீஸ்

பொகவந்தலாவை பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலையும் பொது நூலகமும் நோர்வூட் பிரதேசசபையின் ஊடாக பொது மக்கள் பாவனைக்காக நேற்று (27) கையளிக்கப்பட்டன.

இதற்கமைய, 1,796,921.22ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஆயுர்தேத வைத்தியசாலையும் 1,425,000 ரூபாய் நிதி ஒதுக்கிட்டில் பொது நூலகமும் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

நோர்வூட் பிரதேசசபையின்



தவிசாளர் ரவி குழந்தைவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நோர்வூட் பிரதேச சபையின் உபதவிசாளர் கிஸோகுமார் பொகவந்தலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த பண்டாரா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# விஷேட யாகப் பூஜை

எம்.கே. குமார்

மலையக இந்தியவம்சாவளி மக்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்து, அடுத்த ஆண்டுடன் 200 வருடங்களை பூர்த்தியாவதை முன்னிட்டும் நாட்டு சுபீட்சம் பெறவும் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி ராதாகிருஷ்ணனின் ஏற்பாட்டில் சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் விசேட யாக பூஜை நடைபெற்றது. இந்தியாவின் கோயம்புத்தூர் நகரில் இருந்து வருகை தந்துள்ள பிரபல தமிழ் மொழி குருக்கள் ராஜேந்திரன் தலைமையில் இந்த யாகப் பூஜை நடைபெற்றது.







# ஐயப்ப பஜனை

ஊவா மாகாண ஐயப்ப ஒன்றியத்தினால் ஹப்புத்தளையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐயப்ப பஜனை நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளருமான வடிவேல் சுரேஷ் கலந்துகொண்டார்.

சிங்கள மாணவர்களுக்கான

# தமிழ்மொழி கற்றல் செயலமர்வு

என்.ஆராச்சி

தமிழ் மொழியைக் கற்பதற்கு ஆர்வத்துடன் இருக்கும் சிங்கள மாணவர்களுக்கான தமிழ்மொழி வழிகாட்டல் செயலமர்வு புளத் கொஹுபிட்டிய யக்கெல்ல ஸ்ரீ சீலானந்த மஹா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினமும் (26) நேற்றும் (27) இந்த செயலமர்வுகள் நடைபெற்றதுடன், இதில் குறித்த பாடசாலையில் தரம் ஆறில் கல்வி கற்கும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த மாணவர்களுக்கான மொழி தொடர்பான செயலமர்வு புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்தின் தேசிய மொழிகள் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



# மாத்தளையில் 631 பேர் பாதிப்பு

மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை பிரதேசத்தில் நிலவும் அதிக மழையுடனான வானிலையால் நேற்று (27) காலை வரை 159 குடும்பங்களைச் சேர்ந்த 631 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாத்தளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய மாத்தளை, உக்குவளை, தம்புளை, கலேவல, இரத்தோட்டை, நாவுல, அம்பகங்கோரல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மண்மேடு சரிவு, மரம் முறிந்து விழுதல் உள்ளிட்ட பல அனர்த்தங்களால் மாத்தளை மாவட்டத்தில் 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஆலோசனைகள் மாத்தளை மாவட்ட அதிபர் தேஜானி திலகரத்னவால் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அனர்த்தங்களால் ஏற்பட்ட பாதிப்பை

# கண்காணித்த இராஜாங்க அமைச்சர்



மஹேஸ் கீர்த்திரத்ன

அதிக மழையால் பாதிப்பை எதிர்கொண்டுள்ள மாத்தளை மாவட்ட மக்களின் தேவை குறித்த ஆராய ,விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவலக இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இராஜாங்க அமைச்சர் அதிகம் பாதிப்புக்குள்ளான மாத்தளை மெலதும்பத, ஹுலங்கமுவ மற்றும் நாகொல்ல ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்து அனர்த்தங்களை பார்வையிட்டதுடன், மக்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்துள்ளார்.

அத்துடன் மாத்தளை- ஓவிலிகந்த வீதியில் பாரிய கல்லொன்று வீழ்ந்து போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டிருந்த நிலையில் அதனையும் பார்வையிட்ட இராஜாங்க அமைச்சர், தடைப்பட்டிருந்த வீதியை விரைவாக சீரமைக்குமாறு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதி முகாமையாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# பெருந்தோட்டக் காணிகளை பாதுகாக்க வேண்டியது காலத்தின் தேவை

நாட்டுக்கு அந்நியசெலாவணியை ஈட்டித்தருவதில், 'மாடாய் உழைத்து ஓடாயத் தேய்ந்து' கொண்டிருக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பலரின் வாழ்க்கை என்னமோ, இன்னும் இருளடைந்த நிலையிலேயே உள்ளது.

பெரும் கஷ்டங்களுக்கு முகங்கொடுத்து கல்வி கற்றவர்களும், ஏனைய தொழிற்றுறைகளில் தடம்பதித்துக்கொண்டவர்களும் பெருந்தோட்டங்களை விட்டு வெளியேறி, வெளிமாவட்டங்களில் குடியேறிவிட்டனர். இன்னும் சிலர், தற்காலிகமாக இடம்பெயர்ந்து விட்டனர்.

தங்களுடைய குடும்பத்தில் ஏதாவது நல்லது, கெட்டது இடம்பெற்றால், வீடொன்று தேவை என்பதற்காக, இன்னும் சிலர், லயன் அறைகளை வீடு இல்லாதவர்களுக்கு கொடுக்காமல் வைத்துக்கொண்டுள்ளனர். இன்னும் சிலர் பெருமளவில் செலவு செய்து புனரமைத்துக்கொண்டுள்ளனர்.

பெருந்தோட்டங்களில் வேலை செய்வதுடன் ஏதாவது கால்நடைகளை வளர்த்தல், மரக்கறிகளை பயிர்செய்து மேலதிக வருமானங்களை இன்னும் சிலர் தேடிக்கொள்கின்றனர். குறிப்பாக, தேயிலை பயிரிடாத காணிகளில் மரக்கறித்தோட்டம் செய்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்குப் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான உணவுப் பாதுகாப்பு வேலை திட்டம் அதில் பிரதானமாக அமைந்திருக்கின்றது.

அந்தத் திட்டத்தின் ஊடாக, பயிரிடப்படாத காணிகளில், அல்லது தங்களுடைய வீடுகளைச் சுற்றியிருக்கும் வெற்றுக்காணிகளில் மரக்கறிகளை பயிரிட்டாலும் சில தோட்ட நிர்வாகங்கள், அதற்கு இடமளிப்பதில்லை. மரக்கறிகளை பயிரிட்ட தொழிலாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளையே முன்னெடுக்கின்றன.

உணவுப் பாதுகாப்புக்காக, பிரதேச செயலக மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. காணிகளை இனம் காண்பதற்கும் அவற்றைத் தேவையுடையோருக்கு பகிர்ந்தளிப்பதற்கும், அக்காணிகளில் பயிரிடுவதற்கு அவசியமான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் இக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

"பெருந்தோட்டப் பகுதிகளில், அங்கு காணப்படும் பயிரிடப்படாத நிலங்கள் பகிரப்படவுள்ளன. இதன் போது பெருந்தோட்ட காணிகள் வெளியாருக்கு பகிர்ந்தளிப்பதற்கான வாய்ப்புகளே அதிகம்" என சுட்டிக்காட்டியிருக்கும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், இதனால் தோட்டக்காணிகள் பறிபோகும் அபாயம் உள்ளதென எச்சரித்துள்ளார்.

பெருந்தோட்டக் காணிகளை நாசுக்காக சுவீகரிப்பது, இது முதன்முறையல்ல; யுத்தக் காலத்தில் பெருந்தோட்டங்களை அண்மித்த பகுதிகளில் அமைக்கப்பட்ட தற்காலிக வீதிச்சோதனை சாவடிகள் நிரந்தரமாக்கப்பட்டன. அங்கு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு, அதனை அண்மித்த பகுதிகளில் குடியேற்றங்களை நிறுவி, கிராமங்கள் உருவாக்கப்பட்டன.

அதாவது, பெருந்தோட்ட மக்கள் செறிந்து வாழும் மாவட்டங்களின், குடிசனப் பரம்பலை சீர்குலைக்கும் வகையில், திட்டமிட்ட குடியேற்றங்கள் முளைத்தன. இது, மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் பாரிய தாக்கங்களைச் செலுத்திக்கொண்டிருக்கின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், பெருந்தோட்டக் காணிகள் வெளியாருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டால், நிலைமை இன்னும் மோசமாகும் என்பதைக் கவனத்தில் கொண்டு, பெருந்தோட்ட வெற்றுக்காணிகள், அங்கு ஆண்டாண்டு காலமாக வாழும் மக்களுக்கு மட்டுமே பகிர்ந்தளிக்க வழிசமைக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


மக்களின் கழுத்தை நெரிக்கும்

# மின்சாரத்துறை 'மாபியா' கும்பல்



எம்.எஸ்.எம் ஐயூப்

அடுத்த ஞாயிற்றுக்கிழமை பிறக்கும் புத்தாண்டில், பல பொருளாதார அபாயங்கள் நம்மைச் சந்திக்கக் காத்துக் கொண்டு இருக்கின்றன. ஒருபுறம் அரசாங்கம் புதிய வரிகளை அறவிட திட்டமிடுகிறது. மறுபுறம், மீண்டும் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட இருக்கிறது.

அதேவேளை, பல தசாப்தங்களாக இழுத்தடிக்கப்பட்டு வரும் இனப்பிரச்சினைக்கு, எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி அறிவித்து இருக்கிறார்.

அவரது நோக்கம் பாராட்டக்கூடியதாக இருந்தாலும், அது புத்தாண்டில் மக்கள் மீது சுமத்தப்படப் போகும் பொருளாதார பழுவிலிருந்து, அவர்களது கவனத்தை திசை திருப்பும் ஓர் உத்தி மட்டுமே என்றும் சிலர் கருதுகின்றனர்.

உயர்மட்ட சம்பளம் பெறுவோர் மீது சுமத்தப்படவிருக்கும் வரி, ஏழைகளை நேரடியாகப் பாதிக்காது. ஆனால், ஏனைய வரிகள் எவர் மீது விதிக்கப்பட்டாலும் அவர்கள் அதனை சாதாரண மக்கள் மீது எவ்வாறோ சுமத்திவிடுவார்கள்.

மின்சக்தித் துறையை பாதிக்கும் பிரச்சினைகள், பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது. அரசியல்வாதிகள் இனப்பிரச்சினை போன்ற அரசியல் காரணங்களைக் கொண்டு, இது போன்ற பொருளாதார பிரச்சினைகளை மூடி மறைத்துக் கொண்டு இருப்பதால், அவற்றைப் பற்றி மக்கள் கவனம் செலுத்துவதுமில்லை.

அரசாங்கம் கடந்த செப்டெம்பர் மாதம் மின்கட்டணத்தை அதிகரித்தது. 70 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிப்பதாக அப்போது கூறப்பட்டாலும், உண்மையிலேயே தனித்தனி வீடுகளின் மின்கட்டணம் குறைந்தபட்சம் 200 சதவீதமாக அல்லது 300 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. சிலர் தமது வீட்டுக்கான மின்கட்டணம் ஐந்து மடங்காக அதிகரிக்கப்பட்டதாக முறையிட்டனர். சில விகாரைகளின் மின்கட்டணம் 40,000 ரூபாயிலிருந்து இரண்டு இலட்சத்துக்கு அதிகமாக உயர்ந்ததாக சம்பந்தப்பட்ட விகாராதிபதிகள் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

இந்தநிலையில்தான், புத்தாண்டில் மீண்டும் 75 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்கப் போவதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர கூறியிருக்கிறார். இலங்கை மின்சார சபை நட்டத்தில் இயங்குவதே அதற்குக் காரணம் என அவர் கூறியிருந்தார்.

அதேவேளை, நிலக்கரி பற்றாக்குறையால் அடுத்த வருட நடுப்பகுதியில், 10 மணித்தியாலத்துக்கு மேற்பட்ட மின்வெட்டை அமலாக்க நேரிடும் என மின்சார பொறியியலாளர்கள் கூறுகின்றனர்.

இந்த இரண்டு விடயத்தையும் மையமாக வைத்து, அமைச்சரும் பொறியியலாளர்களும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டு, தாம் பொதுமக்களின் பக்கத்தில் இருந்து வாதிடுவதாகக் காட்டிக் கொள்ள முயல்கின்றனர்.

மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிக்க இடமளிப்பதில்லை என்று பொறியியலாளர்கள் கூறுகின்றனர். பொறியியலாளர்கள் கூறுவதைப் போல், அடுத்த வருடம் பத்து மணித்தியாலம் மின்வெட்டு அமலாக்கப்படாது என்று அமைச்சர் கூறுகிறார்.

மின்கட்டனத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இருக்கிறார். இலங்கை மின்சார சபை நட்டத்தில் இயங்குவதால், கட்டனத்தை அதிகரிக்காவிட்டால் நீண்ட நேர மின்வெட்டை அமலாக்க நேரிடும் என்று அவரும் கூறியிருக்கிறார்.

ஆனால், மின்சார சபையின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்தும் இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க, மின்கட்கனத்தை அதிகரிக்கும் யோசனையை நிராகரிக்கிறார்.

அரசியல் காரணங்களுக்காக 2014ஆம் ஆண்டு மின்கட்டனத்தை குறைக்க எடுத்த தவறான முடிவின் காரணமாகவே, மின்சார சபை நட்டமடைந்து வருவதாகவும் அதற்காக இப்போது மின்பாவனையாளர்களைத் தண்டிக்க முடியாது என்றும் அவர் வாதிடுகிறார்.

இதையடுத்து, அண்மையில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி உரையாற்றும் போது, ஜனக்க ரத்னாயக்கவை கடுமையாக விமர்சித்தார். 'டிரிலியம்' போன்ற சொகுசு மாடி வீட்டுத்திட்டங்களின் உரிமையாளரான ரத்னாயக்க, தாம் கூடுதலாக மின்கட்டனத்தை செலுத்த வேண்டிவரும் என்பதற்காகவே மின்கட்டனத்தை அதிகரிப்பதை எதிர்ப்பதாகவும், தாம் அவரை அழைத்து இது தொடர்பாக கலந்துரையாட இருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

உலகில் தொழில்நுட்ப முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளும் போது, உண்மையிலேயே இலங்கையில் மின்சாரப் பிரச்சினையொன்று இருக்கவே முடியாது. நாட்டின் மத்தியிலிருந்து நாலாபக்கமும் ஓடும் ஆறுகள் இருக்கின்றன. அவற்றால் நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். வருடம் முழுவதிலும் மிகப் பிரகாசமாக சூரியன் ஒளிபடும் நாடு இதுவாகும். எனவே சூரியசக்தி மூலமும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். முறையாகப் பருவக் காற்று வீசுவதால், காற்றாலைகள் மூலமும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும.

அதாவது, ஆரம்ப செலவைத் தேடிக் கொண்டால், நாடு எவ்வாறான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கினாலும் மின்உற்பத்திக்கு எவ்வித தடையும் ஏற்படாது. தண்ணீரும் சூரியசக்தியும் காற்றும் இலவசமாக கிடைப்பதால் மின்கட்டணமும் வெகுவாகக் குறையும்.

அவ்வாறாயின், இலங்கை ஏன் பாரிய எரிசக்திப் பிரச்சினையை எதிர்நோக்கி இருக்கிறது? அரசாங்கங்கள் ஏன் நீர், சூரியசக்தி, காற்றை உபயோகிக்கும் மின்நிலையங்களை கூடுதலாக நிர்மாணிப்பதில்லை?

இது மின்சார சபையில் சிலர், 'மாபியா' கும்பலொன்றைப் போல் செயற்படுவதன் விளைவாகும். இவர்களும் ஏழை மற்றும் சாதாரண குடும்பங்களில் இருந்து உயர்கல்வியைப் பெற்று, தற்போது உயர் அந்தஸ்தை அடைந்தவர்கள்.

பொறியியலாளர்களான இந்தக் கும்பல், மின்சார உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுப்பதில்லை. குறிப்பாக நீர், சூரியசக்தி, காற்று போன்ற விலை குறைந்த, புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களை இவர்கள் விரும்புவதே இல்லை. இவர்கள் டீசல், நிலக்கரி மூலம் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதையே ஊக்குவிக்கின்றனர்.

டீசல், நிலக்கரி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய, வெளிநாட்டு செலாவணி வேண்டும். அதேவேளை குறிப்பிட்டதோர் அளவு டீசல், நிலக்கரியை மட்டுமே மின்சார சபையால் சேமித்து வைத்துக் கொள்ள முடியும்.

எனவே, கோடைகாலத்தில் நீர்த் தேக்கங்கள் வற்றும் போதும் டீசல், நிலக்கரி தட்டுப்பாடு ஏற்படும் போதும், மின்சார சபை தனியார் மின்நிலையங்களில் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்கிறது. இந்தத் தனியார் மின்உற்பத்தி நிலையங்கள், மேற்படி கும்பலுக்கே சொந்தமாக இருப்பதாக கூறப்படுகிறது. எனவே, இந்தக் கும்பல் மின்சாரசபை வெளியில் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யும் நிலையை உருவாக்கவே எப்போதும் முயல்கிறது.

இந்தப் பொறியியலாளர்களே, புதுப்பிக்கத்தக்க மின்சக்தி நிலையங்களுக்கு அனுமதி வழங்குகின்றனர். இந்த அனுமதியை வழங்குவதை வருடக் கணக்கில் தாமதப்படுத்தி, அவற்றின் உரிமையாளர்களை விரக்தியடையச் செய்வதற்கு, இவர்கள் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்கின்றனர். அத்தோடு, இந்த அனுமதியை தாமதப்படுத்தும் வகையில், சட்ட திட்டங்களும் வகுக்கப்பட்டு இருக்கின்றன.

முதலில் ஒவ்வொரு மின்சக்தி அமைச்சரும் இந்நிலையை எதிர்த்தாலும், பின்னர் அவர்களும் இந்தக் கும்பலோடு இசைந்து செயற்படுகின்றனர். ஏன் என்பதை ஊகித்துக் கொள்ள வேண்டும்.

கடந்த பெப்ரவரி மாதம், கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்ட அறிக்கையொன்றின்படி, புதுப்பிக்கத்தக்க மின்சக்தி நிலையம் ஒன்றை ஆரம்பிக்க, மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்ற சுமார் 10 அரச நிறுவனங்களிடம் அனுமதி பெற வேண்டும். அவையும் குறிப்பிட்டதோர் காலத்துக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன.

அவற்றைப் பெற்று மின்நிலையத்துக்கு மின்சார சபையின் இறுதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் காலம் நெருங்கும் போது, மேற்படி 10 நிறுவனங்களிடம் பெற்ற சில அனுமதிப் பத்திரங்கள் காலாவதியாகும் நாள் நெருங்கிவிடுகிறது. எனவே, அவற்றை புதுப்பிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின் காரணமாக, மின்நிலையம் ஒன்றுக்கு மின்சார சபையின் அனுமதியைப் பெற, இரண்டு முதல் ஐந்து வருடங்கள் காத்திருக்க வேண்டும் என கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 2030ஆம் ஆண்டளவில், இலங்கையில் மின்உற்பத்தியில் 70 சதவீதம் புதுப்பிக்கத்தக்க சக்தியின் மூலம் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருந்தார். ஆனால், அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி குறைகூறியிருந்தார்.

நீர்தேக்கங்களை இந்தப் பொறியியலாளர்களே நிர்வகிக்கின்றனர். எனவே, சிலவேளைகளில் அவர்கள் நீர்தேக்கங்களின் நீரை காரணமின்றி திறந்துவிடுகின்றனர். கடந்த ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி, ரந்தெனிகல, ரன்டெம்பே நீர்தேக்கங்களின் நீரை அவர்கள் 14 மணித்தியாலங்களாக திறந்துவிட்டு, தனியார் நிறுவனங்களிடம் 162 மில்லியன் ரூபாய்க்கு மின்சாரத்தை கொள்வனவு செய்தனர். அதைப்பற்றி இரகசிய பொலிஸ் விசாரணை நடைபெற்ற போதிலும் எவரும் தண்டிக்கப்படவில்லை.

சாதாரண மக்களால் கிரகித்துக் கொள்ள முடியாத அளவிலான பாரிய சம்பளத்தையும் ஏனைய வசதிகளையும் மின்சார சபையின் பொறியியலாளர்கள் பெறுகின்றனர். சபையின் ஏனைய ஊழியர்களுக்கும் கொழுத்த சம்பளம் வழங்கப்படுகிறது.

நட்டத்தில் இயங்குவதாகக் கூறும் இச்சபையின் ஊழியர்களுக்கு இவ்வருடமும் போனஸ் வழங்கப் போவதாக கூறப்படுகிறது. இந்தக் காரணங்களும் மின்சார சபையின் மீது பாரிய பழுவாக அமைந்துள்ளன. இவ்வனைத்தும் நாம் நாளாந்தம் இருளில் இருப்பதற்குக் காரணங்களாகும்.



## வாழ்வியல் தரிசனம்

உலகில் வாழும் எந்தவொரு மனிதனும் ஒரே நிலையில், எண்ணத்தில் தன்னை வைத்திருப்பது கிடையாது. குணஇயல்புகள் மாறும் தன்மை உடையன.

காலமாற்றங்கள், சமூகமாற்றங்கள், ஏற்றதாழ்வுகள், அரசியல் மாற்றங்கள், குடும்பப் பிரச்சினைகள், கல்விப் புலமை, புதிய கண்டுபிடிப்புகள், பதவி மாற்றங்கள், போர் நிலைவரங்கள், உள்நாட்டுப் பிரச்சினைகள், வறுமை, செல்வச் செழிப்பு எனப் பல விடயங்களால், மனிதர்களின் எண்ணங்கள், செய்கைகளில் மாற்றங்கள் நடந்த வண்ணமே இருக்கின்றன.

இந்த நிலை இயல்பானது. உலகோடு ஒட்டிவாழும் சகல உயிரினங்களுக்கும் காலமாற்றங்களில் இருந்து விலகமுடியாது.

கெட்டவர்கள் நல்லவர்களாகவும் நல்லமனிதர்களின் மனநிலையில் குழப்பங்களும் திரிபுகளும் தீயசிந்தனைகளும் ஏற்படுவது இயற்கையின் நியதியாக உள்ள சங்கதிகளாகும்.

ஒரே மனநிலையில் எதையும் கண்டுகொள்ளாமல், கேட்காமல், பார்க்காமல் மனிதனால் எப்படி வாழமுடியும்?

எல்லாக் குணாதிசயங்களும் உள்ள மாந்தர்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். எங்களைப் பற்றிய உண்மைகளையே முழுமையாக இதுவரையில் எம்மால் கண்டுபிடிக்க முடியாது இருக்கின்றது.

என்னதான் நாங்கள் முன்னேறினாலும் எங்களிடத்தில் வெளிப்படுவது மனித குணம்தான். இயல்புகள் மாறுவது புதுமையல்ல; உணர்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

வவுனிக்குளத்தில்

### தங்கூசி வலைகளால் உயிரினங்கள் அழியும் அபாயம்

முல்லைத்தீவு, வவுனிக்குளத்தின் கீழான நன்னீர் மீன்பிடியில் தங்கூசி வலைகளை பயன்படுத்தி வருவதால், நீர்வாழ் உயிரினங்கள் அழியும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற வவுனிக்குளத்தின் கீழ் 120க்கும் மேற்பட்ட நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் கூடுதலான மீனவர்கள், தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி, மீன்பிடியை மேற்கொண்டு வருவதால், பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது குறித்த குளத்தில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காகத் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்துவதன் காரணமாக, பல்வேறு வகையான நீர்வாழ் உயிரினங்களும் அழிவடைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் துறை சார்ந்த அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யது பாஸ்கரன்

கேரளா

# 39 நாள்களில் ரூ.222 கோடி வருவாய்

சபரிமலை ஐயப்பன் கோவிலில் கடந்த 39 நாள்களில், 222 கோடி இந்திய ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து திருவிதாங்கூர் தேவஸ்தானத்தின் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மகர விளக்கு மற்றும் மண்டல பூஜை தொடங்கிய நவம்பர் 17ஆம் திகதி முதல் இதுவரை 222 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.




அதேசமயம், ஐயப்பனை தரிசிப்பதற்காக மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள், குழந்தைகளுக்காக சிறப்பு வரிசையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெலுங்கானா

## பெண்ணின் உயிரைக் காத்த 'பர்ஸ்'




தெலுங்கானாவில் பஸ்ஸொன்றில் கைவிடப்பட்ட பர்ஸால் (பணப்பை) பெண்ணொருவர் காப்பாற்றப்பட்ட சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானாவில் சங்காரெட்டி மாவட்டத்தில், பதன்செரு பகுதியில் பஸ்ஸொன்றில் பயணித்த யுவதியொருவர், இறங்கும் போது தவறுதலாக அவரது பர்ஸ்சை விட்டுச் சென்றுள்ளார்.

இந்நிலையில் பஸ்ஸில் அனைவரும் இறங்கிய பின்னர், அங்கு பர்ஸ் ஒன்று இருப்பதை அவதானித்த பஸ்ஸின் நடத்துநர் ரவீந்தர், அதனைத் திறந்து பார்த்த போது, அதில் அதன் உரிமையாளரின் விவரங்களுடன் 500 ரூபாய் பணம் மற்றும் கடிதமொன்றும் இருப்பதைப் பார்த்துள்ளார்.


குறித்த கடிதத்தில் 'எனக்கு திருமணம் செய்ய விருப்பமில்லை; அதனால் எனது வாழ்வை முடித்துக் கொள்ள போகிறேன்' என்றும் எழுதப்பட்டு இருந்துள்ளது.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த நடத்துநர், இது குறித்து உடனடியாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து, பொலிஸாரின் உதவியுடன் அப்பெண் கண்டறியப்பட்டு, அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்நிலையில், சரியான தருணத்தில் செயற்பட்ட நடத்துநருக்கு பொலிஸாரும் பொதுமக்களும் தமது பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

சென்னை



## 1,000 ரூபாய்க்கு விற்கப்படும் பெண்கள்

### அதிர்ச்சியூட்டும் விளம்பரம்

சென்னை, சைதாப்பேட்டை, சின்னமலை மெட்ரோ ரயில் நிலையத்துக்கு அருகே வைக்கப்பட்டிருந்த டிஜிடல் விளம்பரப் பலகையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த விளம்பரப் பலகையில் '1,000 ரூபாய் கொடுத்தால் எந்த பெண்ணுடனும் உல்லாசமாக இருக்கலாம்' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது.

அப்பகுதியில் உள்ள தங்கும் விடுதியுடன் கூடிய ஹோட்டல் ஒன்றின் சார்பிலேயே இந்த விளம்பரப் பலகை வைக்கப்பட்டிருந்தது.


இதனைப் பொதுமக்களில் ஒருவர் வீடியோ எடுத்து, சமூக வலைதளங்களில் வெளியிட்ட நிலையில் குறித்த இவ்வீடியோவானது இணையத்தில் வைரலாகத் தொடங்கியது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், குறித்த விளம்பரப் பலகையை அகற்றியதோடு, இது குறித்து மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்தனர்.

விசாரணையில் குறித்த ஹோட்டலில் பணிபுரியும் ஊழியர் ஒருவரே இவ்வாறு, திட்டமிட்டு குறித்த விளம்பரத்தை வைத்துள்ளமை தெரிய வந்துள்ளது. அதே சமயம் குறித்த ஹோட்டலில் சட்ட விரோதமாக எந்தச் செயல்களும் நடைபெறவில்லை என்றும், இதுபோன்ற விளம்பரங்கள் இனிப் பொதுஇடங்களில் வெளியாகாத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உத்தர பிரதேசம்

## 90 ஆடுகளை பலியெடுத்த ரயில்



உத்தரபிரதேச மாநிலம், பல்ராம்பூர் அருகே, ஆடு மேய்க்கும் நபர், தனது ஆடுகளுடன் ரயில் தண்டவாளத்தில் சென்றுகொண்டிருந்தபோது, கோரக்பூரில் இருந்து லக்னோ நோக்கி சென்ற ரயில் குறித்த ஆடுகள் மீது மோதியது.

இவ்விபத்தில் சுமார் 90 செம்மறி ஆடுகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தன.

இந்நிலையில் தண்டவாளத்தில் சிதறி கிடந்த இறைச்சியை உட்கொள்ள வந்த கழுகுகளும் அதே தடத்தில் வந்த மற்றொரு ரெயிலில் அடிபட்டு உயிரிழந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை

## அறிவிப்பு பலகை விழுந்து உயிரிழப்பு

### நீதிபதி அதிரடித் தீர்ப்பு

அறிவிப்புப் பலகை விழுந்து, பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் 'கடவுளின் செயல்' என ஏற்க முடியாது என, உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

2018ஆம் ஆண்டு திருச்சி-திண்டுக்கல் சாலை, பொன்னம்பலப்பட்டி அருகே உள்ள சுங்கச்சாவடியின் அறிவிப்புப் பலகை விழுந்து பெண் ஒருவர் உயிரிழந்தார். இந்த வழக்கு உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நடைபெற்று வந்தது. இந்நிலையில் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று (27) மீண்டும் விசாரணைக்கு வந்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர், "காற்று அடித்ததால் பலகை விழுந்தது; இது கடவுளின் செயல்" என வாதிட்டார். அப்போது நீதிபதி, "இது கடவுளின் செயல் என்று ஏற்க முடியாது. உயிரிழந்த பெண்ணின் குடும்பத்துக்கு இழப்பீடாக 5 இலட்சம் ரூபாயை விபத்து நடந்த நாளில் இருந்து தற்போது வரை வட்டியுடன் சேர்த்து வழங்க வேண்டும்" என உத்தரவிட்டார்.

கேரளா

## உள்ளாடைக்குள் தங்கம்; யுவதி கைது



கேரள மாநிலம், கரிப்பூர் சர்வதேச விமானநிலையத்தில் திங்கட்கிழமை (26) இளம் பெண்ணொருவர், டுபாயிலிருந்து தங்கம் கடத்தி வந்த குற்றத்துக்காகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த யுவதியின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த சுங்கப் பொலிஸார், அவரைத் தனியாக அழைத்து சோதனை செய்துள்ளனர். இதன்போது அவரிடம் தங்கம் இருப்பதற்கான எச்சரிக்கை மணி ஒலித்துள்ளது. ஆனால், அவர் தங்கம் தன்னிடம் இல்லை என மறுத்துள்ளார்.

இதையடுத்து, யுவதி மீது சுங்கப் பொலிஸார் மேற்கொண்ட தீவிர சோதனையில், சுமார் ஒரு கோடி இந்திய ரூபாய் மதிப்புள்ள 1.9 கிலோ கிராம் தங்கத்தை பசை வடிவில் மாற்றி, 3 பொதிகளில் அடைத்து, அதை உள்ளாடைக்குள் மறைத்து வைத்து கொண்டு வந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவரைக் கைது செய்த பொலிஸார், இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## இணையத்தை சூடாக்கிய பூஜா

தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகையான பூஜா ஹேக்டே தமிழில் மிஸ்டின் இயக்கத்தில் வெளியான 'முகமூடி' என்ற படத்தில் நடித்ததை தொடர்ந்து பல வருட இடைவெளிக்குப் பிறகு விஜய் நடிப்பில் வெளியான 'பீஸ்ட்' படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்தார்.

ஆனால் தமிழில் பூஜா ஹேக்டே நடித்த இரண்டு படங்களும் தோல்வியை தழுவியதால் ராசி இல்லாத நடிகையாக முத்திரை குத்தப்பட்டார். இருந்த போதிலும் சமூக வலைதள பக்கங்களில் விதவிதமான போட்டோக்களை வெளியிட்டு வருகிறார் பூஜா. அந்த வகையில் தற்போது கறுப்பு நிற டைட்டான உடையில் காரில் ஸ்டைலாக போஸ் கொடுத்த புகைப்படங்களை வெளியிட்டு ரசிகர்களை சூடாக்கி உள்ளார்.



## வேற லெவல் புரமோஷன்

அஜித் நடித்த 'துணிவு' படத்தின் வெளிநாட்டு உரிமையை வாங்கியுள்ள 'லைகா' நிறுவனம் இந்தப் படத்தை வேற லெவலில் புரமோஷன் செய்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கோலிவுட் திரையுலகில் முதல் முறையாக துபாயில் ஹெலிகொப்டரில் இருந்து பரசூட் மூலம் ஸ்கை டைவிங் செய்து அஜித்தின் 'துணிவு' போஸ்டர் வானத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

இதுகுறித்த வீடியோவை 'லைகா' நிறுவனம் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட நிலையில் இந்த வீடியோ வைரலாகி வருகிறது.

மேலும் டிசெம்பர் 31ஆம் திகதி 'துணிவு' படத்தின் முக்கிய அறிவிப்பை வெளியிட உள்ளதாக 'லைகா' தெரிவித்துள்ளது. மேலும் அந்த தினத்தை 'துணிவு' தினம் என்றும் அழைக்கலாம் என்றும் 'லைகா' கூறியுள்ளதை அடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## சுஷாந்த் சிங் மரணத்தில் மர்மம்



பிரபல பொலிவுட் நடிகரும் தோனியின் வாழ்க்கை வரலாற்று திரைப்படத்தில் நடித்தவருமான சுஷாந்த் சிங் 2020 ஆம் ஆண்டு திடீரென தற்கொலை செய்துகொண்ட நிலையில் அவரது மறைவு திரை உலகை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்த நிலையில் சுஷாந்த் சிங் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஒருவரின் வாக்குமூலம் இந்த வழக்கில் திருப்புமுனையை ஏற்படுத்தி உள்ளது.

சுஷாந்த் சிங் கழுத்தில் இரண்டு முதல் மூன்று காயங்கள் காணப்பட்டன என்றும் அவரது உடலில் மேலும் சில காயங்கள் இருந்ததையும் தாம் பார்த்ததாக பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஒருவர் வாக்குமூலம் கொடுத்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஆனால், அதே நேரத்தில் ஒருசில பொலிஸ் உயர்அதிகாரிகள் சில புகைப்படங்கள் மட்டுமே எடுத்துவிட்டு உடற்கூறாய்வு செய்யுமாறு கேட்டுக் கொண்டதாகவும் அவர்களின் உத்தரவுபடி தாங்கள் செய்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், சுஷாந்த் சிங் உடலை முதன் முறையாக பார்த்த போது அது தற்கொலை அல்ல; கொலை என்பதை தான் உணர்ந்ததாகவும் அதை மேலதிகாரிகளிடம் தெரிவித்த போது விதிகளின்படி தான் செயற்பட வேண்டும் என்று அவர் கூறியதால் வேறு வழி இன்றி தாம் அமைதியாக இருந்து விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கமல், விக்ரமை தாண்டி 'மாஸ்' காட்டும் சூர்யா!

'கோப்ரா' திரைப்படத்தில் விக்ரம் 8 கெட்டப்பில் நடித்த நிலையில் 'தசாவதாரம்' படத்தில் கமல்ஹாசன் 10 கெட்டப்புகளில் நடித்த நிலையில், இருவரையும் மிஞ்சும் வகையில் 'சூர்யா 42' படத்தில் சூர்யா 13 வேடங்களில் நடித்து வருகிறாராம்.

சூர்யா நடிப்பில், சிறுத்தை சிவா இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'சூர்யா 42'. ஸ்டுடியோ கிரீன் நிறுவனத்தின் ஞானவேல்ராஜா பிரம்மாண்டமாக தயாரித்து வரும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் 'சூர்யா 42' படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பு கேரளாவில் நடைபெற உள்ளதாகவும் முழுக்க முழுக்க இரவில் மட்டுமே படப்பிடிப்பு நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் 45 நாள்கள் படப்பிடிப்பை நடத்த முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் படம் இரண்டு பாகங்களாக உருவாக்கப்பட்டு வருவதுடன், 1,000 வருடங்களுக்கு முந்தைய சரித்திர கதையம்சம் கொண்ட இந்தப் படத்தில் சூர்யா அரத்தர், வெண்காட்டார், முக்காட்டார், மண்டாங்கர், பெருமனத்தார் ஆகிய நான்கு வேடங்களில் நடிக்கவுள்ளார்.

தமிழ் உள்பட 10 மொழிகளில் உருவாக இருக்கும் இந்தப் படத்தில் சூர்யா ஜோடியாக திஷா பதானி நடித்து வருகிறார். இந்தப் படத்திற்கு தேவிஸ்ரீ பிரசாத் இசையமைத்து வருகிறார். வெற்றி பழனிசாமி ஒளிப்பதிவில் நிஷா யூசுப் படத்தொகுப்பில் இந்தப் படம் உருவாகி வருகிறது.



## வயசே ஆகாதா?



நடிகை த்ரிஷாவுக்கு தற்போது 39 வயது ஆகிய நிலையில், அவர் இன்னும் இளம் பெண் போல் 'ராங்கி' படத்தின் புரமோஷன் வீடியோவில் இருப்பதை பார்த்து இரசிகர்கள் "உங்களுக்கு வயசே ஆகாதா" என கருத்து தெரிவித்து வருகின்றனர்.

'லைகா' நிறுவனத்தின் சுபாஷ்கரன் தயாரிப்பில் உருவான 'ராங்கி' திரைப்படம் வரும் 30ஆம் திகதி வெளியாக இருப்பதை அடுத்து, இந்தப் படத்தின் புரமோஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இயக்குநர் ஏ.ஆர் முருகதாஸ் கதையில் 'எங்கேயும் எப்போதும்' சரவணன் இயக்கத்தில் உருவாகி, இந்தப் படம் ரிலீசுக்கு தயாராகி மூன்று வருடங்கள் ஆகிய நிலையில் தற்போது தான் இந்தப் படம் வெளியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இந்தப் படத்தின் புரமோஷனுக்காக த்ரிஷா தனது ட்விட்டர் பக்கத்தில் புதிய வீடியோவை வெளியிட்டு உள்ள நிலையில், அந்த வீடியோவில் த்ரிஷாவை பார்த்து ரசிகர்கள் ஆச்சரியம் அடைந்துள்ளனர்.

இஸ்ரேல்

# சுந்தர் பிச்சை உட்பட 40 கோடி பேரின் தகவல்கள் திருட்டு



கூகுள் நிறுவனத்தின் சி.இ.ஓ சுந்தர் பிச்சை உட்பட 40 கோடி டுவிட்டர் பயனர்களின் தனிப்பட்ட தரவுகள் டார்க் வெப்பில் விற்பனைக்கு உள்ளதாக வெளியான தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேலிய சைபர் செக்யூரிட்டி நிறுவனமான ஹட்சன் ராக் இத் தகவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்" நபர் ஒருவர் டுவிட்டர் பயனர்களின் தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல்கள் உட்பட பல பல தரப்பட்ட தரவுகளை டார்க் வெப்பில் விற்பனை செய்வதாகவும், அதில் கூகுள் சி.இ.ஓ சுந்தர் பிச்சை, நடிகர் சல்மான் கான் , டொனால்ட் டிரம்பின் மகன் டொனால்ட் டிரம்ப் ஜூனியர் உள்ளிட்ட பல முக்கிய பிரபலங்களின் தகவல்கள் இடம்பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இத் தரவுகள் எடுக்கப்பட்டதாகவும், விற்பனையாளர், ட்விட்டர் உரிமையாளர் எலான் மஸ்க்கை மிரட்டி பணம் பறிக்க முயன்றதாகவும், இத் தரவுத்தளத்தில் 40 கோடி டுவிட்டர் பயனர்களின் தனிப்பட்ட தரவுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ்

## வைத்தியசாலையால் ஆணுறுப்பை இழந்த இளைஞர்

கடந்த 2014ஆம் ஆண்டு பிரான்ஸில் உள்ள வைத்திய சாலையொன்றில் வைத்தியர்கள் அளித்த தவறான சிகிச்சையால் நபர் ஒருவர் தனது ஆணுறுப்பை இழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட குறித்த நபர், "கேர்சினோமா" என்ற ஆணுறுப்பில் ஏற்படும் நோய்க்காக குறித்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ள நிலையில் வைத்தியர்கள் அந்நபருக்கு அளித்து வந்த தவறான சிகிச்சையால் அந்நபர் தனது ஆணுறுப்பை அகற்ற வேண்டி நிலைக்குத் தள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட அந்நபர் குறித்த மருத்துவமனைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.




போர்த்துக்கல்

## ரொனால்டோவுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த காதலி

பிரபல காற்பந்து ஜாம்பவானான கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு(Cristiano Ronaldo ),அவரது காதலி ஜார்ஜினா ரோட்ரிக்ஸ்( Georgina Rodriguez), கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு சொகுசு 'வெள்ளை நிற ரோல்ஸ் ரொய்ஸ்' (Rolls Royce Daw) கார் ஒன்றைப் பரிசாக வழங்கியுள்ளார்.

இந்நிலையில் குறித்த காரைப் பார்த்து ரொனால்டோ வாயடைத்து நின்ற வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகிறது.



அதே சமயம் ரொனால்டோ தனது புதிய காரின் புகைப் படத்தையும் இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் பகிர்ந்துள்ளார்.

இது ரொனால்டோவின் முதல் ரோல்ஸ் ரொய்ஸ் அல்ல. மிகப் பெரிய கார் பிரியரான ரொனால்டோ, பல ரகமான கார்களுக்குச் சொந்தக் காரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நைஜீரியா

## டயர் வெடித்ததால் 6 பேர் உயிரிழப்பு

நைஜீரியாவின், கஞ்சுவா என்ற நகரில் கடந்த 25 ஆம் திகதி பஸ்ஸொன்றின் டயர் திடீரென வெடித்ததில், வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் பள்ளமொன்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் குறித்த பஸ்ஸில் பயணித்த 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அதேசமயம் 16 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரித்தானியா

## சீனாவைத் தொடந்து பிரித்தானியா அதிரடி


சீனாவில் கொரோனாத் தொற்றுப் பரவலானது மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது.

இந்நிலையில் இதுவரை தினசரி கொரோனாப் பாதிப்பை வெளியிட்டு வந்த சீனாவின் தேசிய சுகாதார மையம் இனி கொரோனாப் பாதிப்பு விவரங்களை வெளியிட மாட்டோம் என கடந்த 25 ஆம் திகதி அறிவித்தது.

சீனாவின் இந்நடவடிக்கையாது உலக நாடுகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் சீனாவினைத் தொடர்ந்து தற்போது பிரித்தானியாவும் புத்தாண்டில் இருந்து கொரோனா பாதிப்பு விவரங்களை வெளியிடப்போவதில்லை என அறிவித்துள்ளது

இதுகுறித்து பிரித்தானியாவின்



சுகாதார பாதுகாப்பு நிறுவன தொற்றுநோய் தடுப்பு பிரிவு தலைவர் நிக் வாட்கின்ஸ் கூறுகையில், 'தொற்றுநோய்களின் போது, ஆர் மதிப்பு மற்றும் வளர்ச்சி விகிதம் ஆகியவை பொது சுகாதார நடவடிக்கை மற்றும் அரசாங்க முடிவுகளை தெரிவிக்க பயனுள்ள மற்றும் எளிமையான குறிகாட்டியாகச் செயல்பட்டது.

இப்போது, தடுப்பூசிகள் மற்றும் சிகிச்சை முறைகள் நாம் கொரோனாவுடன் வாழும் கட்டத்திற்குச் செல்ல அனுமதித்துள்ளன. கண்காணிப்பும் குறைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தரவை வெளியிடுவது இனித் தேவையில்லை' எனத் தெரிவித்தார்.


ரஷ்யா

## புட்டினை விமர்சித்த பிரபலம் மர்ம மரணம்

ரஷ்யாவின் பாராளுமன்ற உறுப்பினரும், செல்வந்தருமான 'பாவெல் ஜென்ரிகோவிச் ஆன்டோவ்' என்பவர் அண்மையில் ஒடிசாவுக்கு சுற்றுலா சென்றுள்ளார்.

அங்கு ராயகடா என்ற பகுதியில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்த அவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தனது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார்.

இந்நிலையில், கடந்த 25 ஆம் திகதி குறித்த ஹோட்டலின் 3ஆவது தளத்தில் உள்ள ஜன்னல் வழியே கீழே விழுந்து அவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.



இச்சம்பவமானது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த பொலிஸார் ," பாவெல் கடந்த 25ஆம் திகதி மரணம் அடைந்துள்ளார். அவரது குடும்பத்தினரின் அனுமதியை பெற்று அவரது உடலைத் தகனம் செய்து விட்டோம். மேலும் இது குறித்த தீவிர விசாரணையையும் முன்னெடுத்து வருகின்றோம்"எனத் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை உறுதி செய்துள்ள ரஷ்ய பாராளுமன்ற துணை சபாநாயகரான வியாசெஸ்லாவ் கார்துகின் "எங்களது சக உறுப்பினர், ஒரு வெற்றிகர தொழில் முனைவோரான மற்றும் ஏழைகளுக்கு உதவும் தனவந்தரான பாவெல் ஆன்டோவ் மரணம் அடைந்துள்ளார்.

அவருடைய உறவினர்கள், நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து கொள்கிறேன் என சமூக ஊடகத்தில் பதிவிட்டு உள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில்

# ஆதிக்கம் செலுத்தும் அவுஸ்திரேலியா



தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்துகிறது.

மெல்பேணில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 45 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா, சிறிது நேரத்திலேயே ரண் அவுட் மூலம் மர்னுஸ் லபுஷேனை இழந்தது.

பின்னர் டேவிட் வோர்னருடன் இணைந்த ஸ்டீவ் ஸ்மித் இனிங்ஸை நகர்த்திச் சென்ற நிலையில் 85 ஓட்டங்களுடன் அன்றிச் நொர்கியாவிடம் ஸ்மித் வீழ்ந்ததோடு, 200 ஓட்டங்களுடன் வோர்னரும், தொடர்ந்து கமரொன் கிறீனும் றிட்டயர்ட் ஹேர்ட் முறையில் களத்திலிருந்து வெளியேறிய நிலையில், நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 386 ஓட்டங்களைப் பெற்று தென்னாபிரிக்காவின் முதலாவது இனிங்ஸை விட 197 ஓட்டங்கள் முன்னிலையில் அவுஸ்திரேலியா உள்ளது.

தற்போது களத்தில் ட்ரெவிஸ் ஹெட் 48 ஓட்டங்களுடனும், அலெக்ஸ் காரி ஒன்பது ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்கா: 189/10 (துடுப்பாட்டம்: மார்கோ ஜன்சன் 59, கைல் வெரைன் 52 ஓட்டங்கள். பந்துவீச்சு: கமரொன் கிறீன் 5/27, மிற்செல் ஸ்டார்க் 2/39, ஸ்கொட் போலண்ட் 1/34, நேதன் லையன் 1/53)

அவுஸ்திரேலியா: 386/3 (துடுப்பாட்டம்: டேவிட் வோர்னர் 200, ஸ்டீவ் ஸ்மித் 85, ட்ரெவிஸ் ஹெட் ஆ.இ 48 ஓட்டங்கள். பந்துவீச்சு: அன்றிச் நொர்கியா 1/50, ககிஸோ றபாடா 1/94)



## ஓதம்மை விளையாட்டு கழகத்துக்கு நிதியுதவி

நிலமேகம் பிரசாந்த்

பதுளை ஓதம்பை முதலாம் பிரிவு தோட்ட விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு பொருட்களுக்கான நிதியுதவி, மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்புச் செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் ஊவா பகுதியில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு எதிர்வரும் காலங்களில் விளையாட்டுப் பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்தார்.

## கக்போவைக் கைச்சாத்திடும் லிவர்பூல்



நெதர்லாந்து கால்பந்தாட்டக் கழகமான பி.எஸ்.வி ஐந்தோவனின் முன்களவீரரான கோடி கக்போவைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் இணங்கியுள்ளதாக ஐந்தோவன் தெரிவித்துள்ளது.

23ஆவது வயதான கக்போவை 37 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கே ஐந்தோவன் விற்கிறது எனத் தெரிகிறது.

லிவர்பூலின் முன்களவீரர்களான லூயிஸ் டியஸ், டியகோ ஜோட்டா ஆகியோர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் டொட்டென்ஹாம் – பிரண்ட்:.போர்ட் போட்டி

### தோற்ற லெய்செஸ்டர், எவெர்ற்றன்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிரன்ஃபோர்ட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சமப்படுத்தியிருந்தது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற நியூகாசில் யுனைட்டெட்டுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோல்வியடைந்திருந்தது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோல்வியடைந்திருந்தது.



## 'ஒழுக்கத்துடனான கூடிய விளையாட்டே சிறப்பானது'



வேதசகா

"ஒழுக்கத்துடன் கூடிய கல்வி சிறப்பானது. அது போல ஒழுக்கத்துடன் கூடிய விளையாட்டு சிறப்பானது. அது அவசியமாகும்" என காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் குறிப்பிட்டார்.

கிழக்கின் பழம்பெரும் கழகமாம் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமானது கழகத் தலைமையகத்தில் கழகத் தலைவர் வெ.அருட்குமரன் தலைமையில் நடைபெற்றபோதே சிவ ஜெகராஜன் குறித்த கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

மேலும் சிவ ஜெகராஜன் கருத்துத் தெரிவிக்கையில், "ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். தாமதித்தால் விளைவு விபரீதமாகும்" என்றார்.

கழகச் செயலாளர் ச. கிரிசாந்த் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்க, நிதிச் செயலாளர் அ. பிரேமானந்த் கடந்தகால நிதி அறிக்கையை சமர்ப்பித்தார்.

இதன்போது 2023ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. புதிய தலைவராக ரி. தவக்குமார், செயலாளராக எஸ். கிருஷாந்த், பொருளாளராக எ. பிரேமானந்த் உள்ளிட்ட புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 28 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.